18

# ஆக்ஸ்பர்ட்

## சிறு நாவல்கள்

பல தேசத்து

# தேவதைகள் கதை

REGISTRAR OF BOOKS
22 AUG 1916
MADRAS

ர்ட் சர்வகலாசாலை பிரெஸ்
ம்பாயும் மதராஸும்
1915

TB
031,3(5)
N15
85238

= ஆக்ஸ்பர்ட் =

# கதைப் புஸ்தகம்

விலை: ஒவ்வொன்றுக்கு

## ஒரு அணு மூன்று பை

1. **தொட்டதெல்லாம் பொன்: செண்பக வல்லி**—இந்தப் புஸ்தகத்தில் இரண்டு கதைகள் அடங்கியிருக்கின்றன.

2. **நந்தனும் மோகனுங்கியும்:**—இது வெகு விசித்திரமான கதை.

3. **பெரும்புயல், ஷோனுபாய், மர்லினும் விவியனும்:**— இந்தப் புஸ்தகத்தில் மூன்று கதைகள் அடங்கியிருக்கின்றன.

4. **பொன் பறவை: வானவில்லும் புதையல் பணமும்:** இந்தப் புஸ்தகத்தில் இரண்டு கதைகள் அடங்கியிருக்கின்றன.

மேற்கண்ட புஸ்தகங்களை உபாத்தியாயர்களும், வியாபாரிகளும்—சென்னப்பட்டணம் ஹைகோர்ட்டுக்கெதிரில் உள்ள சுங்குராம செட்டித் தெருவில் 21-ம் நம்பர் கட்டடத்தில், ஆக்ஸ்பர்ட் யூனிவர்ஸிடி பிரெஸ் மானேஜரிடத்தில்—பெற்றுக் கொள்ளலாம்.

Oxford Juvenile Story Readers

IN TAMIL

# TALES of the FAIRIES

BY

LEWIS MARSH, M. A.

# பலதேசத்து
# தேவதைகள் கதை

இங்கிலீஷில் எழுதினவர்

லூயி மார்ஷ்

---

**Price: Six Annas**

விலை: ஆறு அணா

---

OXFORD UNIVERSITY PRESS
BOMBAY AND MADRAS

ஆக்ஸ்பர்ட் சர்வகலாசாலை பிரெஸ்
பொம்பாய்: மதிராஸ்

---

1915

# பொருள் அட்டவணை


| | | |
|---|---|---|
| 1. | இங்கிலாந்து தேவதைகள ... | 3 |
| 2. | ஸ்காட்லாண்டு தேசத்து தேவதைகள் ... | 8 |
| 3. | ஐர்லாண்டு தேசத்து தேவதைகள் ... | 14 |
| 4. | நார்வே தேசத்து தேவதை கதை ... | 20 |
| 5. | ஜர்மனி தேசத்து தேவதைகள் கதை | 28 |
| 6. | ஹங்கரி தேசத்து தேவதைகள் ... | 36 |
| 7. | ருஷியா தேசத்து தேவதைகள் ... | 41 |
| 8. | ஸுலூ தேசத்து தேவதைகள் ... | 49 |
| 9. | சிவந்த இந்தியர் தேவதைகள் ... | 55 |
| 10. | பர்சியா தேசத்து தேவதைகள் ... | 57 |
| 11. | இந்தியா தேவதைகள் கதை ... | 65 |
| 12. | சீனு தேசத்து தேவதைகள் ... | 72 |
| 13. | ஜெப்பான் தேசத்து தேவதைகள் ... | 76 |
| 14. | ஆஸ்த்ரேலியா தேவதைகள் ... | 82 |

PRINTED BY DOWDEN AND CO., AT PEERLESS PRESS, MADRAS.

# முகவுரை

இந்தப் புஸ்தகத்தை இங்கிலீஷில் எழுதினவர் பேர்போன லூயி மார்ஷ் என்பவர். இதில் பதினைந்து கதைகள் அடங்கியுள்ளன. இந்தியா, இங்கிலாந்து, ஸ்காட்லாந்து, ஐர்லாந்து, நார்வே, ஜெர்மனி, ஹங்கரி, ருஷியா, சூலு, அமெரிக்கா, பாரசீகம், சீனு, ஜெப்பான், ஆஸ்திரேலியா, எனும் தேசங்களில் வெகு உற்சாகத்துடன் பெரியவர்கள் சொல்ல, மிக ஆவலுடன் சிறுவர்கள் கேட்கும் தேவதைகளைப் பற்றிய கதைகளைத் தெரிந்தெடுத்து அதிக சுருக்கமில்லாமலும் விரிவில்லாமலும் இங்கே எழுதப்பட்டிருக்கிறது.

# இங்கிலாந்து தேவதைகள்

வெகு காலத்துக்குமுன், தேக்கமரத்தையும், ஈட்டியையும், பாலேயையும் கொண்டுபோய் இங்கிலாந்தில் நட்டபோது, கூட்டம் கூட்டமாய் தேவதைகளும் கூடப்போனார்கள். பசுமையான புல் முளைத்த குன்றுகள்மீது அவர்கள் குதித்து விளையாடுவது சகசம்.

அவர்கள் அதிக உயரமல்ல. வெகு நல்ல சுபாவமுள்ளவர்கள். நல் நடத்தையுள்ள மனிதர்களிடத்திலும், நிஜம் பேசுகிறவர்களிடத்தும், வீடுகளை சுத்தமாய் வைப்பவர்களிடத்தும் அவர்கள் அதிக பிரீதியாய் இருப்பார்கள். சோம்பேரிகளைக் கண்டாலும், துஷ்டர்களைப் பார்த்தாலும் அவர்களுக்குப் பிடிக்காது.

இந்த தேவதைகளுக்கு ராஜா ஆபிரன். பூமிக்கும் சந்திரனுக்கும் மத்தியில் ஒரு அரண்மனையில் அவன் வசித்தான். அந்த மாளிகையின் சுவர்கள் சிலந்திப் பூச்சியின் நூலால் ஆகி, ஜன்னல்களெல்லாம் வெண்ணிறமான சந்திரிகையினால் செய்யப்பட்டிருந்தன.

இந்த ஆபிரனுடைய ராணியின் பெயர் மாப். தேவதைகள் குதித்து விளையாடி ஸதிர் பண்ணும் போதெல்லாம் மாப் முன் வந்து நிற்பாள். "நிலாவில் குதிப்போம்; இரவில் விளையாடுவோம்; சூரிய அஸ்தமனம் எங்களுக்குக் கொண்டாட்டம். பனியைக் கண்டால் எங்களுக்கு ஆனந்தம். குதித்துக்

குதித்துப் பாடுவோம்" என்று சொல்லி மாப் ராஜாத்தி குயில்போல் பாடுவள், மயில்போல் ஆடுவள்.

சூரிய உதயமானவுடன், அவர்கள் எங்கேயோ மறைந்து பஞ்சாய்ப் பறந்துபோய் விடுவார்கள். அதிகாலையில் எழுந்திருந்து, புல்லை கவனித்துப் பார்த்தால், அவர்கள் இராமுழுவதும் குதித்திருப்பது ஸ்பஷ்டமாய்த் தெரியும்.

அனேக ஜனங்கள் திர்ஷ்டியில்பட்டு, இங்கிலாந்தில் வெகுகாலம் இருந்த தேவதையின் பெயர் பக். பக்குக்கு இன்னும் எத்தனையோ பெயர்கள் உண்டு. "நல்லதம்பி ராபின்" என்பது அனேகருக்குப் பிடித்த பெயர்.

இராத்திரிகளில் குடியானவர்கள் வீட்டுக்கு வந்து, நல்லமாதிரியுள்ள பெண்கள் செய்ய வேண்டிய வேலையைப் பக் கூடயிருந்து செய்வான். சோம்பலா யிருப்பவர்களைக் கண்டால், அவர்களிடத்தில் ஏதாவது விஷமும் செய்வான்.

இங்கிலாந்தில், உள் நாட்டில் சிறு கிராமங்களில் இருப்பவர்கள், இன்னமும் ராபின் இறந்து போகவில்லை என்கிறார்கள். மலைகளில் உள்ள மரங்களில் ராபின் வஸித்துக்கொண்டிருப்பதாய் அவர்கள் நம்புகிறார்கள். அதுவும் நல்லது தான். குணசாலிகளான பையன்களிடத்திலும், பெண்களிடத்திலும் இந்த தேவதைக்கு எப்போதும் பிரீதி அதிகமானபடியால், இப்போதுகூட சிறுவர்கள் அந்தத் தேவதையின் கிருபையை சம்பாதிப்பதற்காக, நல் நடத்தையுள்ளவர்களா யிருக்கப் பிரயாசைப் படுகிறார்கள்.

## மாப் ராணி

மாப் ராணியின் சோக்ராப் பையனான "தம்ப்" என்பவன் கண்ணுக்கு வெகு அழகாய் இருப்பான். அவனைப் பார்த்து ஆசைப்படாதவர்கள் இல்லவே யில்லை. ஒருநாள் ராஜா ஆபிரன் அவனை தனக்குக் கொடுத்துவிட வேணுமென்று வெகுவாய்க் கேட்டான். ராணி அதற்கு சம்மதிக்கவில்லை. இதன் மேல் ஆபிரனுக்கு அதிகக் கோபமுண்டாயிற்று. மாப் பயந்து எங்கேயாவது கொஞ்சநேரம் ஓடி ஒளிந்து கொள்ளலா மென்று தீர்மானித்தாள். உடனே தன்னுடைய மூன்று தோழிமார்களை அழைத்துக்கொண்டு மேடுகளிலும் பள்ளங்களிலும் குதித்துக் குதித்துக்கொண்டு ஓடினாள். ஓடி ஓடி, கடைசியாய் ஒரு பாக்குமரத்தின் பாளையில் பதுங்கிக் கொண்டாள்.

ராணி ஓடிப்போனதைக்கண்டு, ஆபிரனுக்குக் கோபம் இன்னமும் ஜாஸ்தி ஆகி, அவளைத்தேடிப் பிடிக்கும்படியாய் ஒரு ஆளை அனுப்பினான். இந்த ஆள் வெகுவேகமாய்ப் போகக்கூடிய ஒரு சிலந்திப் பூச்சியின்மேல் ஏறிக்கொண்டு அங்கும் இங்கும் தேடினான். மாப் ராணி வெகு ஜாக்கிரதையாயும் சமர்த்தாயும் மறைந்திருந்ததால் அவள் இருக்கிற இடம் ஒருவருக்கும் தெரியவில்லை.

மாப் ராணியின் ஆண் வேலைக்காரர்களுக்குள் அவளிடத்தில் அதிக விசுவாசமாயிருந்தவன் தாமலின். மஹாராஜா ராணியை ஹிம்ஸைசெய்வது அவனுக்கு ஸம்மதமில்லை. ஆகையால் உறுதியான

ஒரு இலையைப் பறித்து அதை ஈட்டியாக்கிக் கொண்டு, குளவியின் கொடுக்கு விஷத்தை அதன் நுனியில் தடவி, காக்கரட்டாம் பூ ஒன்றை எடுத்து தலைச் சீராவாக வைத்துக்கொண்டு, வாயுவேகம் மனோவேகமாய்ப் பறக்கக்கூடிய ஒரு தேனீமேல் ஏறிக்கொண்டு, ஆபிரனோடு யுத்தத்துக்குப் போனான்.

அதிசீக்கிரத்தில், ஒரு அடர்த்தியான காட்டில் ஆபிரனும் தாமலினும் சந்தித்தார்கள். "ராஜா, உம்முடைய மாளிகைக்குத் திரும்பிப்போய்விடும். இனி ராணி உம்முடைய முகத்தில் விழிப்பதில்லை. ஸ்திரீகளிடத்தில் எவ்விதம் நடக்கவேணு மென்பது உமக்குத் தெரியவில்லை. விவாகம் செய்துகொண்டால், அவள் உமக்கு அடிமையோ? உம்முடைய நடத்தைக்கு ஆதாரம் எந்த சாஸ்திரத்திலும் இல்லை. இனி மாப் ராணியை ஸ்வப்பனத்திலும் நினைக்கவேண்டாம்" என்று தாமலின் வெகு கம்பீரமாய்ச் சொன்னான்.

ராஜாவுக்குக் கோபம் இன்னும் ஜாஸ்தியாகி, தாமலின்மேல் அவன் பாய்ந்தான். இருவரும் கீழே தரையில் விழுந்தார்கள். அவர்களேறியிருந்த வாகனங்கள் இதுதான் ஸமயமென்று நினைத்துத் தப்பி ஓடிப்போயின.

எந்தவிதமாயோ, இந்த யுத்தத்தைப்பற்றி ராணி கேள்விப்பட்டு, நல்லதம்பி ராபினை யழைத்து அவர்களை ஸமாதானப் படுத்தும்படியாய் அனுப்பினாள். ராபின் ஒரு பெரிய பையை எடுத்துக்கொண்டு சமுத்திர மார்க்கமாய் ஓடி, ஜலத்திலிருந்து மேலே கிளம்

பிய மூடுபனி, சோனை எல்லாவற்றையும் பிடித்து அதில் அடைத்துக்கொண்டு, ஆபிரனும் தாமலி னும் யுத்தம் செய்யும் ஸ்தலத்துக்கு வந்து சேர்ந் தான். உடனே பையை அவிழ்த்து, அதில் நிரம்பி யிருந்த மூடுபனியை அவன் வெளியில்விட, அது எங்கும் பரவி ஒருவரையொருவர் பார்க்கமுடியா மல் செய்துவிட்டது. யுத்தம் நின்றுபோய், இன்ன மொரு நல்ல காரியமும் உண்டானது. எதற்காக ராணியின்மேல் கோபமுண்டாயிற்றென்பது ஆபிர னுக்கு மறந்து போய்விட்டது. தாமலினுக்கும் தான் வந்த விஷயம் மறதியாய்விட்டது.

இதை யெல்லாம் செய்துவிட்டு, நல்லதம்பி வேகமாய் ராணியண்டை ஓடி, அவளை அழைத்து வந்து ராஜாவிடத்தில் விட்டான். ஆபிரனும் மாப் ராணியும் அவர்களுடைய பரிவாரங்களும் எல்லா ரும், களித்துக்கூத்தாடிக்கொண்டு அரண்மனைக்குத் திரும்பினார்கள். இதற்கப்புறம் ராஜனும் ராணியும் ஒருநாளும் சண்டை போட்டதில்லை. அவர்கள் கோபமென்பதையே மறந்து, வெகு அன்னியோன் னியமாய் ஒருவர்மேல் ஒருவர் முழு ஆசைவைத்து, அதிக உல்லாஸமாயும், சந்தோஷமாயும் காலக்ஷே பம்பண்ணி வந்தார்கள். அவர்களுடைய பிரஜை களும் அதேவிதம் ஒருவர்க்கொருவர் மனஸ்தாப மில்லாமல் வாழ்ந்திருந்தார்கள்.

## ஸ்காட்லாண்டு தேசத்து தேவதைகள்

ஸ்காட்லாண்டு தேசம் இங்கிலாந்துக்கு வடக்கே இருக்கிறது. அதில் அனேக பர்வதங்களுண்டு. மலைகளின் பக்கங்களில் வேகமாய் ஓடிவரும் அருவிகளின் சப்தம் கீழே இருக்கும் பள்ளத்தாக்குகளிலும் கேட்கும்.

அது வெகு ரமணீயமான தேசம். அதில் ஒரு சிறியபாகம்தான் குடியானவனுக்கு உபயோகமாகும். மலைகளில் உழவும் முடியாது, விதைப்பதும் பிரயோஜனமில்லை. எங்கும் புல் மாத்திரம் அபரிமிதமாய் விளையும்; ஆகையால், ஆடுகளின் தீனிக்குக் குறைச்சலில்லை.

இடையர்கள் குன்றுகளில் வீடு கட்டிக்கொண்டு தங்கள் ஆடுகளை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக் கொள்வார்கள். ஒரு வீட்டுக்கும் இன்னமொரு வீட்டுக்கும் தூரம் அதிகமாயிருக்கும். இப்படித் தனியாய் ஒண்டியாய் பயமில்லாமல் வஸிப்பது அந்த இடையர்களுக்கு வழக்கம்.

முன்னொரு காலத்தில் டொனல்ட் என்றும் ரோரி என்றும் இரண்டு இடைப் பையன்கள் இருந்தார்கள். ஒருநாள் இராத்திரி மந்தையிலிருந்து ஒரு ஆடு எங்கேயோ திசை தப்பிப் போய் விட்டதாகத் தெரிந்தது. பயம் கொஞ்சமும் இல்லாமல், இரண்டு சிறுவர்களும் வெளியில் புறப்பட்டு ஆட்டைத் தேட ஆரம்பித்தார்கள். போய்க் கொண்டிருக்கும்போது, குதிரைகள் வருகிற சப்தமும், வேடர்களுடைய கூச்சலும் கேட்டது.

டொனல்ட்: ராத்திரியில், இந்த வேளையில் வேட்டையாட இங்கே யார் வருவார்கள்?

இப்படி அவன் சொல்லி வாய் ஓய்வதற்கு முன், பதின்மூன்று சிறுமனிதர் மலையின் உச்சியில் சவாரி செய்துகொண்டு வந்தார்கள். தலைமுதல் கால்வரையில் அவர்கள் உடுப்புப் பச்சைப் பட்டால் ஆனது; இடுப்பில் தங்கக் கச்சையும், குல்லாவின்மேல் வெண்மையான இறகுகளும் இருந்தன. அவர்கள் ஏறியிருந்த குதிரைகள் போல் அவ்வளவு அழகான குதிரைகள் கிடைப்பது அரிது.

டொனல்ட்: இந்த வேடர்கள் தேவதைகள். அதில் சந்தேகமேயில்லை. ரோரி வா, நாம் ஓடிப் போய் அவர்கள் எங்கே போகிறார்கள் என்று பார்க்கலாம்.

இரண்டுபேரும் வேகமாய் ஓடி, கடைசியாய் ஒரு பாறையண்டை போய்ச் சேர்ந்தார்கள்.

மத்தியான வேளையில் பாறையாயிருந்தது இப்போது அரண்மனையாகத் தோன்றியது. அதன் ஜன்னல்களெல்லாம் திறந்து, உள்ளெல்லாம் வெளிச்சம் நிறைந்திருந்தது. குதிரை சவாரி செய்தவர்களெல்லாம் அந்த மாளிகைக்குள் போனார்கள். கதவைச் சாத்துவதற்குமுன், டொனல்ட் உள்ளே நுழைந்துவிட்டான். ரோரி வெளியில் இருக்கவேண்டியதாய் விட்டது.

ரோரி வெகு சிறியவன்; என்னபண்ணுகிறதென்று அவனுக்கு யோஜனை தோன்றவில்லை. "அண்ணா, அண்ணா, வா வீட்டுக்குப் போகலாம்" என்று அவன்

மூன்றுதடவை கூப்பிட்டான். பதிலேயில்லை. அங்கே தனியாயிருந்து என்ன செய்கிறது? அதிக துக்கத்துடன், தனியாய் ரோரி வீட்டுக்குத் திரும்பினான்.

டொனல்ட் அரண்மனை வாசல் வழியாய் உள்ளே ஓடினவுடன், ஒரு பெரிய முற்றம் இருப்பதைக்கண்டான். அந்த முற்றத்தைச்சுற்றி அனேக குதிரை லாயங்களிருந்தன. அந்த லாயங்களுக்குள், தேவதைகள் தங்கள் குதிரைகளை நடத்திக்கொண்டு போனார்கள்.

சற்றுநேரத்தில் அவர்கள் திரும்பி வந்தார்கள். ஒருவர் டொனல்டைப்பார்த்து, அவனண்டை ஓடி "இங்கே உனக்கு என்னவேலை? இது தேவதைகளுடைய இருப்பிட மென்று உனக்குத் தெரியாதா? சீக்கிரம் தப்பி ஓடிப்போ. இங்கே நின்று கொண்டிருந்தால் உனக்குக் கஷ்டகாலமாய் விடும்" என்று சொன்னார்.

டொனல்டுக்குத் திரும்புவதில் சம்மதமில்லை.

டொனல்ட்: உங்களுடைய சங்கீதம் நான் கேட்க வேண்டாமா? உங்களோடு நானும் நடனம் செய்யக்கூடாதா? நான் அவ்வளவு பாவியா?

ஒரு தேவதை: மனசிருந்தால் வா. எப்போதும் உனக்கு இதனால் துக்கமுண்டாகிவிடும்.

மற்றப் பன்னிரண்டு தேவதைகளும் எல்லாரும் ஒரு குரலாய் "ஆம். உனக்குத் தீராதுக்கம் உண்டாகும்; யோஜித்துக் கொள்" என்று சொன்னார்கள்.

உடனே அவர்கள் அவனுடைய கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு உள்ளே போனார்கள். ஒரு பொன்கதவு திறக்க அவர்கள் உள்ளே நுழைந்தார்கள். ஒரு வெகு அழகான மண்டபம் தெரிந்தது. அதனுடைய சுவர்களெல்லாம் வெள்ளியால் செய்யப்பட்டிருந்தன; தரையெல்லாம் தங்கத் தகடு. வரிசை வரிசையாய் விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன; மேலேயிருந்து முத்து சரம் தொங்கி அதன் நுனியில் விளக்கு கோர்க்கப்பட்டிருந்தது. மண்டபம் நாலு பக்கங்களிலும் சிறு கண்ணாடி மேஜைகளிருந்தன; அவைகள்மேல் பழங்களும் மிட்டாய்களும் ஏராளமாய்க் கொட்டி இருந்தன.

இந்தப் பிரகாசமான அறையில் கணக்கில்லாமல் தேவதைகளிருந்தார்கள். டொனல்ட் பார்த்து பிரமித்துப் போனான்.

சில தேவதைகள் மேஜைகளின் பக்கத்திலிருந்து பழங்களை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இன்னும் சிலர் திவ்வியமாய் பாட்டுப்பாடிக் கொண்டிருந்தார்கள். அனேகர் வெகு உல்லாசமாய் நடித்துக் கொண்டிருந்தார்கள்.

டொனல்ட் அவர்களை எல்லாம் உற்றுப் பார்த்தான். இதைக்கண்டு தேவதைகள் கொல்லென்று சிரித்தார்கள்; அவனும் சிரித்தான். உடனே அவர்கள் எல்லாரும் அவனைச் சுற்றிக்கொண்டு குதித்துக் கும்மியடித்துப் பாடி நடனம் செய்தார்கள். இரா முழுவதும் அவர்களோடு டொனல்டும் நடனமாடினான். அதிக சிரமத்தால் அவன் தரையில் படுத்து அயர்ந்து தூங்கிப் போனான்.

டொனல்ட் விழித்துப் பார்த்தபோது மத்தியானமாயிருந்தது. ஒரு பெரிய கறுத்த கற்பாறையின்மேல் படுத்திருந்தான். இந்தப் பாறைதான் முந்தின நாள் இராத்திரி தேவதைகளுடைய மாளிகையாயிருந்தது. என்ன தூக்கம் தூங்கினேனென்று சொல்லிக்கொண்டு அவன் எழுந்து சோம்பல் முறித்தான். எதோவிதமாய் ஒரு நீண்ட வெள்ளை தாடி அவன் மோவாய்க்கட்டையிலிருந்து முழங்கால் வரையில் தொங்கின்து. அவன் தோளின் மேலும் மயிர் முளைத்திருந்தது. அதுவும் வெள்ளை மயிர்.

இதை யெல்லாம் பார்த்து அவனுக்கு பயமுண்டாயிற்று. மெள்ள தன்னுடைய தகப்பனுருடைய குடிசையிருந்த இடத்துக்குப் போனான். அங்கே குடிசையே யில்லை. சமீபத்தில் தனக்கு அனேக சினேகிதர்களிருந்த ஒரு சிறு கிராமத்துக்குப் போனான். தெருவுகள் வழியாய் நடந்து நடந்து பார்த்தும் எல்லாம் புதிதாய் இருந்தது. வீடுகளெல்லாம் புதியனவாயிருந்தன ; முன்னிருந்த கடைகளெல்லாம்போய், புதுக்கடைகள் வந்து விட்டன ; ரஸ்தாக்களெல்லாம் புதியவை ; இதை யெல்லாம் விட, தனக்குத் தெரிந்த ஆள் ஒருவன்கூட எங்கேயும் காணப்படவில்லை.

டொனல்ட் தன் கதையைச் சொல்லிப் பார்த்தான். "ஐயோ, ஒருவருக்கும் என்னைத் தெரியாதா?" என்று கெஞ்சிக்கேட்டான். எல்லாரும் தலையை அசைத்து, இவனுக்கு என்னமோ பைத்தி

யம் பிடித்திருக்கிறது என்று சொல்லிப் போய் விட்டார்கள்.

கடைசியில் ஒரு கிழவன் அவனண்டை வந்து "என்னுடைய தாத்தா டொனல்ட் என்றொருவனைப்பற்றிச் சொல்லுகிறதுண்டு. நூறு வருஷத்துக்கு முன் தேவதைகள் அவனைத் தூக்கிக்கொண்டு போய் விட்டதாகச் சொல்லுவார். நீ அந்த டொனல்டாய்த்தானிருக்கவேணும்" என்று சொன்னான். தான் தேவதைகளோடு நடித்துக் கொண்டிருந்தபோது ஒரு நூற்றாண்டு ஆகிவிட்டதென்று டொனல்டுக்குத் தெரிந்தது. அவனுடைய தகப்பனும், தம்பியும், சிநேகிதர்களும் இறந்துபோய் வெகு காலமாய்விட்டது.

டொனல்ட் அதிக துக்கத்துடன் திரும்பி மலையை நோக்கிப் போனான்; மெதுவாயும் தள்ளாமலும், மேலும் மேலும் ஏறிப்போனான். அவன் போவது எல்லாருக்கும் விநோதமாயிருந்தது. சிறு பிள்ளைகள் அவன் பின் கொஞ்சதூரம் போய்த்திரும்பி விட்டார்கள். டொனல்ட் செய்தி இன்னும் ஒருவருக்கும் தெரியாது. ஒருவேளை தேவதைகளோடு சேர்ந்து விட்டானோ, என்னமோ. ஏதாவது சமாசாரம் தெரிய வந்தால் அவசியம் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

# ஐர்லாண்ட் தேசத்து தேவதைகள் கதை

## இரண்டு புட்டிகள்

ஐர்லாண்ட் தேசத்தில் தரையில் ஈரம் ஜாஸ்தி. அங்கே மழை வெகு அதிகம்; அதனால் பயிரெல்லாம் கெட்டுப்போகிறது. ஆனால், மழையினால் ஒரு லாபமுண்டு. வருஷம் முழுவதும் புல் காய்ந்து போகாமல் பச்சையாய் இருக்கிறது. இதனால் குடியானவன் ஆடு மாடுகளை அதிகமாய் வளர்க்க முடிகிறது. அவைகளுக்குப் போதுமானபடி கொழுத்த செழுமையான புல் ஏராளமாய் வளருகிறது.

ஐர்லாண்ட் தேசத்தாருக்கு தமாஷ் அதிகம். அவர்களுக்குள் ஏழைகளும் ஜாஸ்தி; அவர்களுக்கு சாப்பிட ஆகாரம் அகப்படுவது துர்லபம். இப்படியிருந்தும், அவர்களைப்போல் உல்லாஸமான ஜாதியார் இல்லை. கஷ்டம் சம்பவித்தாலும், துக்கப்படாமல் அவர்கள் சிரித்துக்கொண்டிருப்பார்கள். அந்த தேசத்தில் வழங்கிவரும் சாதாரண கதைகளும், தேவதைகளைப்பற்றிய கதைகளும் வெகு வேடிக்கையாயிருக்கும். அந்தக் கதைகளைக் கேட்டால் சிரிக்காமலிருக்க முடியாது.

முன்னொரு காலத்தில் ஓகானர் என்னொரு குடியானவன் இருந்தான். அவன் வெகு ஏழை. இரண்டு வருஷமாய் அதிக மழையினால் அவன் பயிரெல்லாம் நாசமாய்ப் போய்விட்டது. காலக்ஷேபத்துக்கு ஒரு வழியும் இல்லை.

அவனுடைய பெண்சாதி: "நாம் என்ன செய்யலாம்? நம்முடைய பசுவை சந்தைக்குக் கொண்டு

போய் நல்ல விலைக்கு விற்றுவிடும்" என்று புருஷனிடத்தில் சொன்னாள்.

அவன் பேச்சின்படி, ஓகானர் சந்தைக்குப்போனான். வழியிலே, கோமாளிமுகத்தோடு கூடிய ஒரு சிறு மனிதன் அவனண்டை வந்து "ஓகானரே, இது வெகு நல்ல பசுவாயிருக்கிறதே" என்றான்.

ஓகானர்: ஆம். இது வெகு நேர்த்தியான பசு தான். உமக்கு வேணுமா? வாங்கிக்கொள்ளுகிறீரா?

குள்ளன்: என்னிடத்திலிருக்கிறது இந்தப் பழைய புட்டிதான். வேணுமானால், அதைப் பதிலாய்க் கொடுக்கிறேன்.

ஓகானர் (வெகு கோபமாய்): உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா? அதென்ன, விலையுயர்ந்த பசுவுக்குப் பதிலாய் ஒரு நாறலான பழைய புட்டியைக் கொடுக்கிறேன் என்கிறாயே?

குள்ளன்: இது சாதாரண புட்டியா? க்ஷணத்தில் உன்னை அது பணக்காரன் ஆக்கிவிடுமே. அதைத் தரையில் வைத்து, "புட்டியே, புட்டியே, நீ செய்யவேண்டியதைச்செய்" என்று சொல்லி, பின் நடக்கிறதைப் பார்த்துக்கொள்.

ஓகானர் அதிக சந்தோஷப்பட்டு, பசுவைக் கொடுத்துவிட்டு புட்டியை வாங்கிக்கொண்டு வீட்டுக்கு வந்தான். பெண்சாதி, நடந்த விஷயத்தைக் கேட்டவுடன், அதிக கோப மூண்டாள்; ஆனால் புட்டியின் விசேஷத்தை அவன் சொன்னவுடன், சந்தோஷத்தால் பூரித்துப்போனாள்.

ஓகானருக்குப் பொறுத்திருக்க சம்மதமில்லை. வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவானேன்? காமதேனு பக்கத்திலிருக்க தரித்திரத்தினால் வருந்துவானேன்? புட்டியைக் கீழேவைத்து, குள்ளபாஸ்கர் சொல்லிக்கொடுத்தவிதம் சொன்னான். உடனே இரண்டு தேவதைகள் அதிலிருந்து புறப்பட்டு "உனக்கு என்னவேணும்" என்று கேட்டார்கள்.

ஓகானர்: வீட்டிலே ஒரு பருக்கை சாதமும் இல்லை. சீக்கிரம் நல்ல போஜனம் வேணும்.

தக்ஷணமே தேவதைகள் சாப்பாட்டு மேஜையின்மேல் பொன் தட்டுகளும் வெள்ளித் தட்டுகளும் பரப்பி, அவைகளில் வாய்க்கு வெகு ருசியான சாப்பாட்டையும் வைத்தார்கள். குடியானவனும் அவன் பெண்சாதியும் திர்ப்தியாய் சாப்பிட்டு ஏப்பமிட்டார்கள். தேவதைகள் பழையபடி புட்டிக்குள் மறைந்து போனார்கள்.

ஓகானர் தட்டுகளை யெல்லாம் விற்று அதிக பணம் சம்பாதித்தான். அவன் தரித்திரம் விடிந்து, வேண்டிய ஆஸ்தியும் உண்டாகிவிட்டது. தனக்கு ஒரு வண்டியும் குதிரையும், தன் பெண்சாதிக்கு உயர்ந்த உடுப்புகளும் வாங்கினான்.

இந்த வாழ்வு திடீரென்று எப்படி அவர்களுக்கு வந்ததென்று ஜனங்கள் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். ஓகானர் சமர்த்துதான்; ஒருவருக்கும் தன் இரகஸ்யத்தைச் சொல்லவில்லை.




"Bottle, do your Duty"

ஓகானர் குடியிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரன் பேராசை பிடித்த ஒரு கிழவன். ஓகானரிடத்தில் போய் அவ்வளவு பணமும் எவ்விதம் கிடைத்ததென்று கேட்க, வெகு நேரம் பதில் சொல்லாமல் கடைசியில் புட்டியின் பிரதாபத்தை அவன் சொல்லிவிட்டான்.

வீட்டுக்காரன்: நீ குடியிருக்கிற வீட்டையும் பக்கத்திலுள்ள நிலத்தையும் உனக்குக் கொடுத்துவிடுகிறேன். இந்தப் புட்டியை எனக்குத் தா.

ஓகானர் அதிகபணக்காரனுய் விட்டதால், இனி இந்த புட்டி என்னதற்காக வேணுமென்று முட்டாள்தனமாய் எண்ணி, அதைக் கொடுத்துவிட்டான்.

ஓகானரிடத்தில் பணம் அதிகமாய்த்தானிருந்தது.

ஆனுல், அற்பனுக்குப் பவிஷு வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பானல்லவா? அதேவிதம், தலை கால் தெரியாமல் ஆஸ்தியையெல்லாம் செலவிட்டான். வெகு சீக்கிரத்தில் பணமெல்லாம் செலவழிந்து போய்விட்டது. படுக்கப் பாய் இல்லை; தின்னத் தீனியில்லை; ஸர்வ பாப்பராய்விட்டான்.

ஓகானர் பெண்சாதி: இன்னமொரு பசு பாக்கி இருக்கிறது. அதைக் கொண்டுபோய் விற்று சரியான விலை வாங்கி வாரும்.

மாட்டை ஓட்டிக்கொண்டு, ஓகானர் சந்தைக்குப் போனுன். போகும்போது, முன்போல அதிர்ஷ்டம் கிடைக்குமா என்று யோஜித்துக் கொண்டிருக்கும்போது அதே குள்ளன் சிரித்துக்கொண்டு,

எதிரே வந்து நின்று "இது வெகு நேர்த்தியான பசுவா யிருக்கிறதே. என்னிடத்தில் ஒரு பழைய புட்டி இருக்கிறது. அதை யெடுத்துக்கொண்டு இதைத் தருவாயா" என்று கேட்டான்.

ஓகானருக்கு அளவற்ற சந்தோஷமுண்டாகி, பசுவைக் கொடுத்து புட்டியை வாங்கிக்கொண்டான். வேகமாய் வீட்டுக்குப்போய், முன்போலவே புட்டியைத் தரையில் வைத்து "புட்டியாரே, செய்ய வேண்டியதைச் செய்யும்" என்று ஓகானர் சொன்ஞன். கண்ணிமைப்பொழுதில், இரண்டு பெரிய ஆள்கள் புட்டியிலிருந்து வெளியில் வந்து ஓகானரையும் அவன் பெண்சாதியையும் இடுப்பு முறிய அடித்து விட்டார்கள். தங்களுடைய வேலையை முடித்துவிட்டு, புட்டிக்குள் புகுந்து அவர்கள் மறைந்து போஞர்கள்.

கொஞ்சநேரம் கழித்து, உடம்பில் சக்திவந்த பிறகு, ஓகானர் புட்டியை எடுத்துக்கொண்டு முன்போல வீட்டுக்காரக் கிழவனிடத்தில் போஞன்.

கிழவன்: ஓகானர், இப்போது என்ன வேணும்?

ஓகானர்: ஒன்றும் வேண்டாம். ஆஞல் முன்னே நான் கொடுத்த புட்டியைக் காட்டிலும் அதிக வரப்பிரஸாதியான இன்னமொரு புட்டி வைத்திருக்கிறேன்.

கிழவன்: அது நல்லதாயிருந்தால் வாங்கிக்கொண்டு உனக்கு நல்ல விலை தருவேன்.

ஓகானர் புட்டியைத் தரையில் வைத்து, முன்போல உத்தரவிட்டான். தக்ஷணமே இரண்டு ராக்ஷ

தர்கள் அதினின்றும் கிளம்பி கிழவனையும் அவனோடு கூட யிருந்த சினேகிதர்களையும் அடித்து தும்ஸம் பண்ணினார்கள்.

" இவர்களை நிறுத்து. என் பிராணன் போகிறது. ஐயோ! உன்னை விடமாட்டேன். ஓகானர், உன்னைத் தூக்கிவிடச் செய்வேன். நிறுத்து, நிறுத்து " என்று கிழவன் கூவினான்.

ஓகானர்: அவர்கள் நிற்க மாட்டார்கள். என்னுடைய பழைய புட்டியைத் திருப்பிக்கொடுத்தால் நிறுத்தி விடுகிறேன். அதோ யிருக்கிறது; கொடுத்து விடு.

கிழவன் பெண்சாதியிடத்தில்: இந்தப் பாதகனுக்குப் பழைய புட்டியைக் கொடுத்து விடு. என்னைக் கொன்றுவிடுவான். சீக்கிரம் எடுத்துக் கொடுத்து விடு.

அப்படியே அவள் பழைய புட்டியைக் கொடுத்தவுடன், ஓகானர் அதை எடுத்துக் கொள்ளவே, இரண்டு ஆள்களும் அடிப்பதை நிறுத்திவிட்டு முன் போல புட்டிக்குள் நுழைந்து கொண்டார்கள். இரண்டு புட்டிகளையும் கையில் எடுத்துக்கொண்டு ஓகானர் வீட்டுக்குத் திரும்பிப்போனான்.

ஓகானர் முன்போலவே அதிக பணக்காரனானான். அறுவகை உணவும் எப்போதும் சிரமமில்லாமல் அவனுக்குக் கிடைத்தது. விலையுயர்ந்த உடுப்புகளும், ஏராளமான ஐச்வரியமும், எல்லாவித சம்பத்தும் அவனுக்குக் கிடைத்து, தானும் தன் பெண்சாதியும் பிள்ளைகளும் வெகு சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

# நார்வே தேசத்து தேவதை கதை

## முதல் பாகம்

நார்வே தேசத்தில் குளிர் ஜாஸ்தி. ஜனங்கள் அனேகமாய் ஸமுத்திரக் கரையில் குடியிருந்து கொண்டு பயிர்த்தொழில் செய்வதாலும் மீன் பிடிப்பதாலும் காலக்ஷேபம் பண்ணுகிறார்கள்.

உள் நாடுகளில் காட்டு மரங்களையும் பயிர் பச்சை இல்லாத மலைகளையும்தான் காணலாம். இந்த மலைகளில் பூர்வ காலங்களில் ராக்ஷசர்கள் குடியிருந்தார்கள். அவர்களைப்பற்றி அனேக கதைகள் வழங்கி வருகின்றன. அவைகளில் ஒன்று இப்போது சொல்லுகிறேன்.

இரண்டாயிரம் வருஷத்துக்குமுன், நார்வேயில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஏழு குமாரர் இருந்தார்கள். அவர்கள் பெரியவர்களான போது, ஆறுபேர் வெளியே புறப்பட்டு, தாங்கள் கல்யாணம் செய்துகொள்வதற்காகப் பெண் தேடப் போனார்கள். இளைய குமாரன் மாத்திரம் தகப்பனாரிடத்தி லிருந்தான்.

ஆறு குமாரர்களும் அனேக அரண்மனைகளுக்குப் போய் அங்கே யிருக்கும் ராஜகுமாரத்திகளைப் பார்த்தார்கள். கடைசியாய் ஒரு பட்டணத்துக்கு வந்தார்கள். அந்த நகரத்து அரசனுக்கு ஆறு குமாரத்திகள் இருந்தார்கள். அவ்வளவு அழகான பெண்களை ராஜகுமாரர்கள் எங்கும் பார்த்ததில்லையாகையால், அவர்களைக் கல்யாணம் செய்துகொண்டு ஸ்வய தேசத்துக்குத் திரும்பினார்கள்.

அவர்கள் வெகுதூரம் போய் ஒரு பெரிய மலையண்டைசேர்ந்தார்கள். அதில் ஒரு ராக்ஷசன் வஸித்துக்கொண்டிருந்தான். குகையினின்றும் வெளியே வந்து அவர்களைப் பார்த்து உடனே எல்லாரையும் கல்லாக மாற்றிவிட்டான். ஆறு ராஜகுமாரர்களும், அவர்களுடைய ஆறு பெண்சாதிகளும், ஆக பன்னிரண்டுபேரும் பன்னிரண்டு கல்லாய் மாறினார்கள்.

ராஜகுமாரர்களுடைய பிதா பிள்ளைகள் வரவை ஆவலாய் எதிர் பார்த்திருந்தான். அவர்கள் திரும்பி வருவதாகத் தோன்றவில்லை. ஏழாவது குமாரன் தகப்பனுடைய துக்கத்தை அறிந்து தான் போய் அவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க உத்தரவு கேட்டான்.

இந்தப் பிள்ளையையும் இழந்துவிட்டால் என்ன செய்வதென் றெண்ணி அரசன் சம்மதிக்கவில்லை. ஆனால் அந்தச் சிறுவன் திரும்பத்திரும்பக் கெஞ்சிப் பிரார்த்திக்க, பிதா ஒத்துக்கொண்டான்.

ராஜகுமாரன் வெகு தள்ளாமையான ஒரு கிழக் குதிரைமேலேறிப் புறப்பட்டான். கொஞ்ச தூரம் போனபோது, ஒரு ஓநாய் எதிரில் வந்தது. அதற்குப் பசி வெகு ஜாஸ்தியாய், நிற்கக்கூட சக்தியில்லாம லிருந்தது.

ஓநாய் : ஸ்னேகிதா, உன்னுடைய கிழக் குதிரையை எனக்குத் தீனியாகக் கொடு. இரண்டு வருஷமாய் எனக்கு ஆகாரம் ஒன்றுமே கிடைக்கவில்லை. என்மேல் பரிதாப மில்லையா?

ராஜகுமாரன் : என் குதிரையைக் கொடுத்துவிட்டால் நான் எப்படிப் பிரயாணம் போகிறது?

ஓநாய்: என் முதுகின்மேல் ஏறிக்கொள்ளலாம். எங்கே போகவேணுமென்றாலும் கொண்டு போய் விடுகிறேன். உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்க மாட்டேனா?

ராஜகுமாரன்: சரி, அப்படியானால் குதிரையைக் கொன்று பசி தீர்த்துக்கொள். ஆனால் என்னைச் சந்தியில் விட்டுவிடாதே. சொன்ன பேச்சை ஞாபகம் வைத்துக்கொள்.

---

## இரண்டாம் பாகம்

ஓநாய் குதிரையைத் தின்று களைப்பாறிச் சந்தோஷமாய் ராஜகுமாரனை முதுகிலேற்றிக்கொண்டு வெகு வேகமாய் ஓடிற்று. போகும்போதே தன் கதை முழுவதும் வாலிபன் சொல்லி, தன் சகோதரர்களைப்பற்றி ஏதாவது தெரியுமோ என்று கேட்டான்.

ஓநாய்: எனக்குத் தெரியும். அவர்களும் அவர்கள் பெண்சாதிகளும் கல்லாய் சமைந்திருக்கிறார்கள். அதெல்லாம் ஒரு ராக்ஷசன் பண்ணின விஷமம். இன்னும் கொஞ்சதூரம் போன பிற்பாடு அவர்களை உனக்குக் காட்டுகிறேன்.

அப்படியே, ஒரு மலையின் பக்கத்தில் அவர்கள் போய்ச் சேர்ந்தபோது,

ஓநாய்: ராஜகுமாரா, இதுதான் ராக்ஷசன் இருப்பிடம். இந்தக் கற்கள் தான் உன்னுடைய பந்துக்கள். பயப்படாதே. கதவைத்திறந்து

உள்ளே போனால், அங்கே ஒரு ராஜகுமாரியைக் காண்பாய். ராக்ஷசனை எவ்விதம் பிண்டம் பண்ணிவிடலா மென்பதை அவள் உனக்குக் கற்பிப்பாள்.

ராஜகுமாரன் வெகுபயம் பயந்து கொண்டு உள்ளே நுழைய, ராக்ஷசன் வெளியே போய்விட்டா னென்று தெரிந்தது. அது கொஞ்சம் தைரியம் கொடுத்தது. அதன்மேல் இன்னும் உள்ளே போனபோது, அங்கே அதிக ஸௌந்தர்யமான ஒரு ராஜகுமாரத்தியைக் கண்டான்.

ராஜகுமாரத்தி: வாலீபா, எங்கே யிருந்து வந்தாய்? ஐயோ! உனக்குக் கஷ்டகாலம் வந்து விட்டதே!

என்று சொல்லிப் படுக்கையின் கீழ் அவனை ஒளித்து வைத்தாள்.

இரண்டொரு நிமிஷத்தில், ராக்ஷசன் வெகு பசியாய் வீட்டுக்குத் திரும்பினான். ராஜகுமாரத்தி அவனுக்கு வேண்டிய சாப்பாட்டை வெகு உபசாரத் துடன் பரிமாற, அவன் வெகு சந்தோஷமாயிருந் தான். அந்த சமயத்தில்

ராஜகுமாரத்தி: ஒரு விஷயம் உம்மைக் கேட்கலா மென்று யோஜிக்கிறேன். ஆனாலும் அதைக் கேட்க தைரியம் வரவில்லை.

ராக்ஷசன்: என்ன வேணும் சொல், பார்க்கலாம்.

பெண்: உம்முடைய ஹிருதயத்தை எங்கே வைத்து விட்டு இங்கே வருகிறீர்?

ராக்ஷசன்: அதை நீ கேட்பது சரியல்ல. ஆனாலும் சொல்லுகிறேன். அதோ யிருக்கிறதே ஒரு பழைய அலமாரி, அதில் இருக்கிறது.

இப்படிப் பதில் சொல்லிவிட்டு, இளி இளி என்று உரக்க சிரித்துவிட்டுப் படுத்துத் தூங்கினான்.

மறுநாள் சூரியோதயத்துக்கு முன்னே ராக்ஷதன் எழுந்திருந்து, காட்டுக்குப் போய்விட்டான். ராஜகுமாரனும், ராஜகுமாரத்தியும் உடனே எழுந்திருந்து, அலமாரியண்டை வந்து ராக்ஷசனுடைய ஹிருதயத்தைத் தேடினார்கள். எங்கே தேடினாலும் அது அகப்படவில்லை.

"ராக்ஷசன் பொய் சொல்லிவிட்டான். இன்னமொருதடவை பார்க்கலாம்" என்று சொல்லி, தோட்டத்திலிருந்த வெகு அழகான புஷ்பங்களையெல்லாம் பொறுக்கி, அலமாரியைச் சுற்றிப்பரப்பினாள்.

---

## மூன்றும் பாகம்

ராக்ஷசன் வீட்டுக்குத் திரும்பும் சமயம் வந்துவிட்டது. ராஜகுமாரனும் வழக்கப்படி படுக்கையின் கீழ் மறைந்து கொண்டான்.

ராக்ஷசன் வந்து அலமாரியைச் சுற்றியிருந்த புஷ்பங்களைப் பார்த்து, யார் இங்கே இந்தப் பூக்களைப் போட்டதென்று கேட்டான்.

ராஜகுமாரத்தி: உம்மிடத்தில் எனக்கு இருக்கும் ஆசையினால், உம்முடைய ஹிருதயம் எங்கேயிருக்கிறதோ, அங்கே இந்த மலர்களைப் போட்டு அலங்கரித்தேன்.

ராக்ஷசன் : முட்டாளே, என்னுடைய ஹிருதயம் அங்கே இல்லை. அது எங்கே யிருக்கிறதென்பதை உனக்கொரு நாளும் சொல்ல மாட்டேன்.

ராஜகுமாரத்தி வெகுவாய்க் கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டாள். படத்தில் எழுதிப்பார்க்கும்படியான அழகுள்ளவள் அந்தப் பெண். அவள் ராக்ஷசன் கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்குவாள்; அவன் முகத்தோடு தன் முகத்தை வைப்பாள். அவன் கோரப்பல்லை எவ்வளவு அழகாயிருக்கிறதென்பாள். அவன் மன்மதனே, அதற்குச் சந்தேகமில்லையென்று சத்தியமா யுரைப்பாள். அவன் மடியில்போய் உட்கார்ந்துகொண்டு அவன் செம்பட்ட மயிரைக் கோதுவாள். எருமை மாட்டுத்தோல் மாதிரியிருக்கும் அவன் தேகத்தைத் தடவிக் கொடுப்பாள். இவ்விதமெல்லாம் அவனை சந்தோஷப்படுத்த, அவனும் மதிமயங்கி, ஸாம்ஸனைப்போல உறுதி தவறி, தன்னுயிர்நிலையைச் சொல்லி விட்டான்.

"இங்கே யிருந்து வெகு தூரத்தில் ஒரு ஏரி யிருக்கிறது. அதன் மத்தியில் ஒரு தீவு; அந்தத் தீவில் ஒரு கோவில். அந்தக் கோவிலின் பிராகாரத்தில் ஒரு கிணறு இருக்கிறது; அந்தக் கிணற்றில் ஒரு வாத்து நீந்திக் கொண்டிருக்கிறது. அந்த வாத்தின் வயிற்றில் ஒருமுட்டை யுண்டு; அந்த முட்டைக்குள் வஸிக்கிறது என் ஹிருதயம்."

மறுநாள் ராக்ஷசன் வழக்கப்படி அதிகாலையில் எழுந்திருந்து காட்டுக்குப் போய் விட்டான். ராஜகுமாரன் பெண்ணிடத்தில் செலவுபெற்றுக்கொண்டு

ராக்ஷசனுடைய ஹிருதயத்தைத் தேடப் புறப்பட்டான். வீட்டின் வெளியில் வந்தவுடன், பழைய சினேகிதனான ஓநாய் எதிரில் வந்து நின்றது.

நடந்த விர்த்தாந்தத்தை யெல்லாம் ராஜகுமாரன் சொல்ல, "ஓநாய் சரி, என் முதுகில் ஏறிக்கொள், அங்கே போய்ச் சேரலாம்" என்றது.

இருவரும் வெகுதூரம் போனார்கள். மேடுகளும் பள்ளங்களும் அனேகம் வழியில் இருந்தன. முள் நிறைந்த செடிகளும் மரங்களும் அவர்களை அதிக சிரமப்படுத்தின. எதற்கும் பயப்படாமல், அதைரிய மென்பதே கொஞ்சமுமில்லாமல் இருவரும் சென்றார்கள். மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினர் அல்லவா? அதேவிதம் இரண்டுபேரும் சிரமத்தைப் பாராட்டாமல் ஏரி பண்டைவந்து, அதில் நீந்தித் தீவை யடைந்தார். கோவிலும் எதிரில் இருந்தது. கிணறும் தோன்றினது ; வாத்தும் நீந்திக் கொண்டிருந்தது. ராக்ஷசன் சொன்னதெல்லாம் வாஸ்தவம் தான்.

ராஜகுமாரன் வாத்தை ஒரு கையால் பிடித்து வெளியில் தூக்க அதன் வயிற்றிலிருந்த முட்டை கீழே விழுந்தது. அது கிணற்றுக்குள் விழுந்திருந்தால் ராஜகுமாரனுக்கு வயசு குறுகிப்போயிருக்கும். அதிர்ஷ்ட வசமாய், முட்டை கீழே விழுவதற்கு முன் ராஜகுமாரன் அதைக்கையில் ஏந்தினான். ஓநாய் பக்கத்திலிருந்துகொண்டு முட்டையை நசுக்கச்சொன்னது. ராஜகுமாரன் அவ்விதம் செய்ய, ராக்ஷசன் கோவிலில் கதறுகிற சப்தம் கேட்டது.

ராக்ஷசன்: என்னைக் கொன்றுவிடாதே. உனக்கு வேண்டியதை யெல்லாம் தருகிறேன்.

ஓநாய்: பையா, உன்னுடைய சகோதரர்களுக்கும் அந்தப் பெண்களுக்கும் உயிருண்டாகச் செய்யச் சொல்.

ராக்ஷசன் அப்படியே செய்தான்.

ஓநாய்: இந்தப் பாதகன்மேல் பச்சாத்தாபம் வேண்டாம். அவனுக்கு ஐயோ வென்றால் ஆறு மாசப்பாவம் வந்துவிடும். அந்த முட்டையை இரண்டாக்கிவிடு.

ராஜகுமாரன் ஓநாய் சொன்னபடி செய்ய, ராக்ஷசன் துண்டுதுண்டாய்க் கீழே விழுந்தான். முன்போலவே, ஓநாயின் மீதேறிக்கொண்டு, ராஜகுமாரன் திரும்ப ராக்ஷசன் வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அங்கே அவனுடைய ஆறு சகோதரர்களும், அவர்களுடைய பெண்சாதிகளும் வெகு உல்லாசமாய் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ராஜகுமாரன் வீட்டுக்குள்போய் ராஜகுமாரத்தியை வெளியிலழைத்துவந்து தன்னுடைய சகோதரர்களையும், அவர்களுடைய ஸ்திரீகளையும் அவளுக்குக் காட்டினான்.

பின்பு வெகு சம்பிரமமாய், ராக்ஷசனுடைய வீட்டிலிருந்து தங்களுக்கு வேண்டிய திரவியங்களை எடுத்துக்கொண்டு எல்லாரும் தங்கள் தேசத்துக்குத் திரும்பினார்கள். ராஜகுமாரன் அந்தப் பெண்ணை விவாகம் செய்து கொண்டான். அந்தக் கல்யாணத்

துக்கு விருந்து இன்னமும் நடந்து கொண்டிருக்கிறது. என் பேச்சில் நம்பிக்கை யில்லாமல் போனல், நீங்களே போனல் அந்த சம்பிரமம் இவ்வளவென்று உங்களுக்குத் தெரியும்.

## ஜர்மனி தேசத்து தேவதைகள் கதை

(இரண்டு வரம்)

### முதல் பாகம்

ஜர்மனி தேசத்தின் வடபாகம் விரிந்தசமபூமி; அதில் உள்ளவர்கள் நிலத்தை உழுது பயிரிட்டு காலக்ஷேபம் பண்ணுகிறவர்கள். அங்கே சில பட்டணங்களும் உண்டு; கடற்கரையோரங்களில், பெரிய துறைமுகங்களும் இருக்கின்றன.

ஜர்மனியின் தெற்கு பாகங்களில் அனேக உன்னத பர்வதங்களுண்டு. இந்த மலைகளின் குகைகளில் குள்ளர்கள் ஒரு காலத்தில் குடியிருந்தார்கள். அவர்கள் நல்ல சுபாவமுள்ள மனுஷ்யாளிடத்தில் அதிகப் பிரீதியாயும், தங்களுக்கு கெடுதல் செய்தவர்களிடத்தில் அதிக குரூரமாயும் இருந்தார்கள். இந்தக் குள்ளர்களைப்பற்றி அனேக கதைகள் கேட்டிருக்கிறேன். அவைகளில் ஒன்று இப்போது சொல்லுகிறேன்.

ஹான்ஸ் என்று பெயருள்ள ஒரு வேலைக்காரனிருந்தான். மூன்று வருஷகாலமாய் தன் எஜமானனிடத்தில் மனப்பூர்வமாய் உழைத்தான். அதற்




"Three whole crowns," replied Hans.

கெல்லாம் சம்பளம் என்பதே அவனுக்குக் கிடைக்க வில்லை. ஒரு நாள் எஜமானனண்டை போய்,

ஹான்ஸ் : ஐயா, உங்களிடத்தில் வெகு காலமாய் வேலை செய்திருக்கிறேனே. என்னுடைய தாயாரைப் பார்க்க ஆவலாயிருக்கிறது. வீட்டுக்குப் போகிறேன். தயவாய் என் சம்பளத்தைக் கொடுங்கள்.

எஜமானன் மூன்று வராகன் கொடுத்தான்.

எஜமானன் : ஹான்ஸ், இங்கே வா, இந்தப் பணத்தை எடுத்துக்கொள். ஒவ்வொரு வருஷத்துக்கு உனக்குச் சம்பளம் ஒரு வராகன்.

எஜமானன் தனக்குக் கொடுத்த சம்பளம் அதிகம் என்றுதான் ஹான்ஸ் எண்ணினான். பணத்தைப் பையில் போட்டுக்கொண்டு, தன் ஊருக்குப் போகப் புறப்பட்டான். மலைகள் வழியாய்க் குதித்துக்கொண்டும், பாடிக்கொண்டும் போனான். ஒரு பெரிய கற்பாறையைத் தாண்டுகிற சமயத்தில், ஒரு குள்ளன் தன் குகையினின்றும்வெளியில் வந்தான்.

குள்ளன்: வெகு கொம்மாளம் போடுகிறாயே, என்ன விசேஷம் ?

ஹான்ஸ் : மூன்று வருஷம் வேலைசெய்து சம்பளம் சேர்த்து வாங்கிக்கொண்டேன். பணமெல்லாம் இதோ என் பையில் இருக்கிறது. இதைப் பார்க்கிலும் மனுஷ்யனுக்கு என்ன சந்தோஷம் வேணும் ?

குள்ளன் : அது எவ்வளவு பணம் ?

ஹான்ஸ் : மூன்று வராகன்.

குள்ளன் : அதை எனக்குக் கொடுப்பாயா? நான் வெகு ஏழை; என்னிடத்தில் பணமே யில்லை.

ஹான்ஸ் இதைக் கேட்டவுடன் குள்ளன்மேல் அதிக இரக்கப்பட்டு தன்னிடத்திலிருந்த மூன்று வராகனையும் அவனுக்குக் கொடுத்து விட்டான்.

குள்ளன் : உன் மனசே மனசு. நீ வெகு நல்லவன். வரம் கொடுக்கிற சக்தி எனக்குண்டு. உனக்கு வேண்டிய இரண்டு விஷயங்கள் கேள்.

ஹான்ஸ் : எனக்கு இன்றைக்கு நல்ல அதிர்ஷ்டம் தான்; தடையே யில்லை. புறப்பட்டவுடன் நரி குறுக்கே போயிற்று. நல்லவன் முகத்தில் விழித்திருக்கவேணும். எனக்குப் பணம் அவ்வளவு வேண்டாம். எனக்கு வேண்டியது முதல் முதல் ஒரு வில்லும் அம்பும். இதை வைத்துக்கொண்டு எதையும் சுட்டுத் தள்ளி விடலாம். இரண்டாவது ஒரு பிட்டில் (வாத்தியப்பெட்டி) வேணும். நான் பிட்டிலில் வாசித்தால், அதைக் கேட்கிறவர்களெல்லாம் குதிக்க வேணும்.

குள்ள பாஸ்கரன் தன்னுடைய மலைக்குள் புகுந்து, ஹான்ஸ் கேட்ட வில், அம்பு, பிட்டில் மூன்றையும் கொண்டு வந்து வெகு சந்தோஷமாய் அவனுக்குக் கொடுத்தான்.

---

## இரண்டாம் பாகம்

முன்னைப் பார்க்கிலும் இன்னும் அதிக உல்லாஸமாய் ஹான்ஸ் குதித்துக்கொண்டு போனான்.

வில்லையும் அம்பையும் முதுகில் தொங்கவிட்டுக் கொண்டு, பிட்டிலைக் கழுத்தில் தொங்கவைத்தான். கொஞ்சதூரம் போனவுடன் ஒரு கிழவன் எதிரில் வந்தான். பக்கத்தில் ஒருமரம் இருந்தது; ஒரு பக்ஷி அதில் உட்கார்ந்து கொண்டு வெகு நேர்த்தியாய்ப் பாடிக்கொண்டிருந்தது.

கிழவன்: எவ்வளவு அழகான பக்ஷி! என்னிடத்தில் பணம் ஏராளமாய் இருக்கிறது. யாராவது அதைப் பிடித்துக் கொடுத்தால் அவனுக்கு ஐந்து வராகன் கொடுக்கத் தயாராய் இருக்கிறேன்.

ஹான்ஸ்: எங்கே, பார்க்கலாம். பணத்தைக் காட்டு; பக்ஷியை உன் கையில் உடனே வைக்கிறேன்.

கிழவன் பணத்தைக் கையில்வைத்துக்கொண்டு காட்டினவுடன், ஹான்ஸ் வில்லை எடுத்து, பக்ஷியைக் குறிபார்த்துச் சுட்டான். குறி தப்பவில்லை. பறவை அடிபட்டு, மரத்தடியிலிருந்த ஒரு செடியில் விழுந்தது.

கிழவனுக்குப் பேராசை அதிகம். பணம் ஒன்றும் கொடுக்காமல் பறவை தனக்குக் கிடைக்காதா வென்று பார்த்தான். கையிலிருந்த ஐந்து வராகனை யும் பையில் போட்டுக்கொண்டு, பக்ஷியை எடுக்க நகர்ந்து செடியண்டை போனான்.

ஹான்ஸுக்கு இது வருத்தமா யிருந்தது. "பணம் கொடுக்கிறதாகச் சொல்லி பறவை யைச் சுடும்படியாகச் செய்து, என்னை இப்படி ஏமாற்றுகிறானே, இது நியாயமா? கைக் கெட்டி

னது வாய்க் கெட்டவில்லையே" என்று சொல்லி, தன் பிட்டிலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

வாத்தியம் வாசிக்கத் துடங்கினவுடன், கிழவன் பக்ஷியை எடுப்பதை விட்டுவிட்டுக் குதிக்க ஆரம்பித்தான். செடியில் முள் நிறைந்திருந்தது; அவனுடைய உடுப்பெல்லாம் முள்பட்டுப் பீறல்பீறலாய்க் கிழிந்து போய்விட்டது. கிழவனுடைய கை, கால் எதிலும் காயம்; ரத்தம் அதிகமாய் ஓடினது.

கிழவன்: பிட்டில்கார ஐயா, என்மேல் கொஞ்சம் இரக்கமாயிரும். கொஞ்சம் பிட்டில் வாசிப்பதை நிறுத்தும். நான் உமக்கு என்ன கெடுதல் செய்தேன், இப்படி என்னை ஹிம்ஸிக்கிறீரே?

ஹான்ஸ்: என்னவா செய்தாய்! என்னை ஏமாற்றினாற் போல், எத்தனையோ பேரையும் இந்த மாதிரி தான் நீ ஏமாற்றி இருப்பாய். நீ வெகு லுச்சா என்பதற்குச் சந்தேகமே யில்லை.

இப்படி சொல்லிக் கொண்டு, மறுபடியும் ஹான்ஸ் பிட்டில் வாசிக்க ஆரம்பித்தான். துஷ்டக் கிழவன் முன்னைப்பார்க்கிலும் உயர உயரக் குதித்தான். கடைசியில் பிட்டில் வாசிக்காமலிருந்தால் நூறு வராகன் ஹான்ஸுக்குக் கொடுப்பதாய்ச் சொன்னான். நூறு வராகனைக் கண்டவுடன் ஹான்ஸுக்கு ஆனந்தம் பொங்கி, "சரி, உன்னுடைய பேரத்துக்கு நான் சம்மதிக்கிறேன்" என்று சொல்லி, பிட்டில் வாசிப்பதை நிறுத்திப் பணத்தை எடுத்துக்கொண்டு, தன் வழியே போனான்

கிழவன் செடியிலிருந்து நகர்ந்து வெளியே வந்து ஹான்ஸை எப்படி ஏமாற்றலாமென்று யோஜனை பண்ணினன். கடைசியாய், ஒரு நியாயாதிபதியிடத்தில் போய் "ஸ்வாமி, ஒரு திருடன் என்னுடைய பணத்தையெல்லாம் அபகரித்துக்கொண்டு என்னை அடித்துக் காயப்படுத்திவிட்டான். முதுகின்மேல் ஒரு வில் தொங்கவிட்டுக்கொண்டிருப்பான்; கழுத்தில் ஒரு பிட்டில் தொங்கும். இந்த அடையாளத்தால் அவனைக் கண்டுபிடிக்கலாம்" என்று முறையிட்டான்.

ஆகவே, நியாயாதிபதி சிப்பாய்களை அனுப்பி, அந்த அடையாளமுள்ள மனிதனைக் கொண்டுவரும்படி உத்தரவிட்டார். அவர்கள் காடுமேடுகளிலெல்லாம் அலைந்து, கடைசியில் ஹான்ஸைக்கண்டு அவனைப் பிடித்துக்கொண்டுவந்து நியாயாதிபதியின் முன் நிறுத்தினர்கள்.

---

## மூன்றாம் பாகம்

ஹான்ஸ் ஜட்ஜ் முன்னல் வந்தவுடன், அவர் ஏன் கிழவன் சொத்தைத் திருடி அவனை அடித்தாயென்று கேட்டார்.

ஹான்ஸ்: நான் திருடினேனு? அவனல்லவா கொடுத்தான். ஒரு ராகம் இந்த பிட்டிலில் வாசித்ததற்காகவும், நடனம் செய்ய அவனுக்குக் கற்பித்ததற்காகவும் அந்தப் பணம் கொடுத்தான்; இது ஸத்தியம்.

ஜட்ஜ்: நீ சொல்வது வெகு வேடிக்கையாக இருக்கிறது. பொட்டைக் கிழவி கூட நீ சொல்வதை

நம்பமாட்டாளே. இது நியாயசபை யென்பதை மறந்து விளையாடுகிறாய். இதற்குத் தண்டனை தூக்கு மரத்தில் தொங்கி விளையாடுவது தான். சிப்பாய்களே, இவனைப் பிடித்துக்கொண்டுபோய் உடனே உயிர் வாங்கி விடுங்கள்.

ஹான்ஸ்: நியாயாதிபதி ஸ்வாமி, நான் இறந்து போவதற்குள் ஒரு விஷயம் பிரார்த்திக்கிறேன். அதை மாத்திரம் தயவாய் உத்தரவு பண்ணுங்கள்.

ஜட்ஜ்: உன் உயிரைக் கேட்காதே.

ஹான்ஸ்: எனக்குப் பிராணன் வேண்டாம். அந்த வாதியையும் கொஞ்சம் இங்கே நிறுத்தி வையுங்கள். ஐந்து நிமிஷம் என்னை பிட்டிலில் ஒரு ராகம் வாசிக்க மாத்திரம் இடங்கொடுங்கள்.

கிழவன்: நானும் ஒரு மனு கேட்டுக்கொள்ளுகிறேன். அவன் ராகம் வாசிக்கும்போது, என்னைக் கெட்டியாய்க் கட்டி விடுங்கள்.

இவன் சொன்னதை ஜட்ஜ் கவனிக்க வில்லை.

ஹான்ஸ் கையில் பிட்டிலை எடுத்து, ஒரு ராகம் வாசிக்க ஆரம்பித்தான். தக்ஷணமே, ஜட்ஜ், கிழவன், அங்கே இருந்த சிப்பாய்கள் முதலான எல்லாரும் குதிக்க ஆரம்பித்தார்கள்.

இது வேடிக்கையல்லவா? கோர்ட்டில் ஜட்ஜ் குதித்து விளையாடுவது விநோதமல்லவா?

ஒரு நாழி எல்லாரும் சந்தோஷமாய்க் குதித்தார்கள். நாழியாக நாழியாக, அவர்கள் சிரமப்

பட்டு பாட்டை நிறுத்தும்படியாய் ஹான்ஸைக் கெஞ்சிக் கேட்டார்கள்.

ஹான்ஸ்: நான் நிறுத்தமாட்டேன். ஜட்ஜ் அவர்கள் என்னைக் கொல்லமாட்டேன் என்று உறுதியாகச் சொல்லி, என்னுடைய நூறு வராகனையும் திருப்பிக்கொடுக்க உத்தரவு பண்ணினால் தான் நிறுத்துவேன்.

ஜட்ஜுக்கு இது முதலில் ஸம்மதமில்லை. கொஞ்ச நாழியான பிறகு, அதிக களைப்படைந்து ஹான்ஸ் கேட்டபடி உத்தரவு செய்யத் தயாராயிருந்தார். ஜட்ஜ் தயவாய் இருந்த ஸமயம் பார்த்து, ஹான்ஸ் கிழவனை யழைத்து:

“ இப்போதாவது நிஜத்தைச்சொல், அந்தப் பணம் உனக்கெப்படி கிடைத்தது? நிஜம் சொல்லாமற்போனால், நான் பிட்டில் வாசித்துக் கொண்டேயிருப்பேன்” என்று சொன்னான்.

கிழவன் தலை குனிந்துகொண்டு: நான் திருடினேன்.

இதைக் கேட்டவுடன் ஹான்ஸ் பிட்டில் வாசிப்பதை நிறுத்தினான். அங்கே இருந்தவர்கள் எல்லாரும் உடனே குதிப்பதையும் நிறுத்தினார்கள். கிழவனைப் பொய் வியாச்சியம் கொண்டுவந்ததற்காகவும் திருடினதற்காகவும் ஜட்ஜ் கடுமையாய்த் தண்டித்தார்.

# ஹங்கரி தேசத்து தேவதைகள் கதை

ஹங்கரி தேசத்தில் புல் நிறைய வளர்ந்த ஸம பூமிகள் அதிகம். அங்கே பசுக்களும் குதிரைகளும் ஸம்பிரமமாய் மேய்ந்துகொழுத்திருக்கின்றன. அந்த நாட்டில் ஒரு குடியானவனும் அவன் பெண்சாதியும் இருந்தார்கள். அவர்களுக்கு ஒரு பையனும், ஒரு பெண்ணும், ஆக இரண்டு குழந்தைகள்.

ஒருநாள் புருஷனும் பெண்சாதியும் சந்தைக்குப்போய் சில பசுக்களை விற்றுவரத் தயாரானார்கள்.

தாயார் சிறு பெண்ணைப்பார்த்து : "மேரி, அப்பாவும் நானும் சந்தைக்குப் போகிறோம். நீங்கள் இரண்டு பேரும் விஷமம் செய்யாமல் வீட்டில் ஜாக்கிரதையாய் இருக்கவேணும். பசிவேளையில் தம்பிக்குச் சாதம்போடு; சாப்பிட்ட பிறகு இரண்டு பேரும் தோட்டத்தில் விளையாடுங்கள். ஆனால் வீட்டைவிட்டு ரஸ்தாவுக்குப் போய்விடாதேயுங்கள்" என்று சொன்னாள்.

அப்படியே இரண்டு பேரும் சாப்பிட்டு விட்டு, தோட்டத்தில் விளையாடினார்கள். சற்றுநேரத்துக்குள், அந்த கிராமத்துக் குழந்தைகள் வீதியில் இங்கும் அங்கும் ஓடுவதைக்கண்டு, தங்கள் விளையாட்டைவிட்டு, அவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மேரி (தனக்குள்): அம்மா சொன்னது ஞாபகம் இருக்கிறது. ஆனாலும் என்ன? கொஞ்சநேரம் தெருவில் போய் அந்தப் பிள்ளைகளுடன் விளையாடினால் என்ன குற்றம் ?

அப்படி விளையாடிக் கொண்டிருக்கும்போது, சிலநாரைகள் தோட்டத்துக்குள் பறந்துபோவதைப் பார்த்து அவள் பயந்தாள். நாரைகள் சிறு குழந்தைகளைத் திருடிக்கொண்டு போவது வழக்கமென்று கேழ்விப்பட்டிருந்தாள். இதனால் தான் மேரி நடுங்கி வீட்டுக்குள் தேடிப்பார்க்க, எங்கேயும் தம்பியைக் காண வில்லை.

மேரிக்குத் துக்கம் மிகுந்து, அழுது ஓ என்று அவள் கதறினாள்.

மேரி : குழந்தையை நாரைகள் கொண்டுபோய் விட்டனவே! அப்பாவும் அம்மாவும் என்ன சொல்வார்கள்! நான் ஏன் குழந்தையைத் தனியாய் விட்டுவிட்டு அஜாக்கிரதையா யிருந்தேன் ?

அழுகையை நிறுத்திவிட்டு, மேரி எழுந்து வெகு வேகமாய் வயல்களை நோக்கி ஓடினாள். ஒரு வேளை நாரைகளைக் கண்டு தன் தம்பியைத் திரும்ப அடையலாமென்று நினைத்தாள்.

---

## இரண்டாம் பாகம்

புல் நிறைய வளர்ந்திருந்த ஒரு இடத்தண்டை மேரி வந்து அங்கே தேடும்போது, ஒருபெரிய அடுப்பையும் அதன்மேல் ஆறு அப்பம் சுட்டுக்கொண்டிருப்பதையும் கண்டாள்.

அடுப்பு : பெண்ணே, பெண்ணே, அப்பங்களை எடுத்து விடு. அவைகள் காந்திப் போய்விடும்.

மேரி வேகமாய் ஓடி, அப்பங்களை எடுத்து வெளியில் வைத்துவிட்டு, “ அடுப்பே, அடுப்பே,

என் தம்பியைத் தூக்கிக்கொண்டு நாரைகள் எங்கே போய் விட்டன தெரியுமா, சொல் " என்றாள்.

அடுப்பு: தெரியும். இந்த வயலைத் தாண்டிப்போ; அங்கே ஒரு ஒற்றடிப்பாதை தெரியும். அந்த ண்டை இந்தண்டை ஒதுங்காமல் நேரே போ.

மேரி அப்படியே போய் சீக்கிரத்தில் ஒரு இலந்த மரத்தின் கிட்டச் சேர்ந்தாள்.

இலந்த மரம்: பெண்ணே, பழம் நிறைந்து எனக்கு அதிக பாரமாய் இருக்கிறது. கொஞ்சம் என்னைக் குலுக்கிப் பழத்தை உதிரவை.

மேரி அப்படியே மரத்தைக் குலுக்க, பழங்களெல்லாம் கீழே உதிர்ந்து விழுந்தன. அதன்மேல் பழங்களை யெல்லாம் குவித்துவிட்டு, மரத்தைப் பார்த்து, மேரி: "மரமே, மரமே, நாரைகள் என் தம்பியை எங்கே கொண்டுபோய் வைத்திருக்கின்றன, சொல்" என்றாள்.

இலந்த மரம்: பெண்ணே, அதோ தெரிகிறதே நதி, அதன் கரையோடு நடந்து போ; வழியில் ஒரு கிழக்குதிரை இருக்கும்; அது வெகு புத்தி சாலி; அதற்குத் தெரியாத விஷயம் இல்லை. அதனிடத்தில் கேட்டால், நிச்சயமாய் உன் தம்பி யிருக்கு மிடமறிந்து கொள்ளலாம்.

அப்படியே மேரி குதிரையினிடத்தில் போய்க் கேட்டாள்.

குதிரை (வெகு பக்ஷமாய்): குழந்தாய், சொல்லு கிறேன் கேள். அதோ தெரிகிறதே மலை; அதில் ஒரு குகை இருக்கிறது. அதற்குள் நுழைந்து

அந்தண்டைபோனால், அங்கே ஒரு குடிசை யிருக்கும்; அந்தக் குடிசையில் உன் தம்பி யிருக்கிறான்.

இதைக்கேட்டு, மேரி அதிக சந்தோஷமடைந்து வெகு வேகமாய்க் குடிசையண்டை போனாள். அது வெகு வேடிக்கையான குடிசை. சுவரெல்லாம் ரொட்டியால் செய்யப்பட்டு, கூரையெல்லாம் கலுக் கண்டால் நிறைந்திருந்தது. அதற்குள் ஒரு கிழ சூன்யக்காரி இருந்தாள். ஜன்னலில் மேரியினுடைய தம்பி தங்கத்தாலான பந்தை வைத்துக்கொண்டு விளையாடிக் கொண்டிருந்தான்.

மேரி ஆவலாய் ஓடி, குழந்தையை எடுத்துக் கொண்டு, வெகு வேகமாய்த் திரும்பி ஓடிவந்தாள்.

இதைப்பார்த்து, சூன்யக்காரி அதிக கோப மாய் நாரைகளை யழைத்து, "அந்தப் பிள்ளையை இன்றை இராத்திரி நான் நெய்யில் வறுத்து உண் ணவேணும். உடனே போய்ப் பிடுங்கிக்கொண்டு வந்துவிடுங்கள். வெறுங் கையோடு வந்தால், உங் களை டாறுடாறாய்க் கிழித்துப் போடுவேன்" என் றாள்.

---

## மூன்றாம் பாகம்

நாரைகள் மேரியைப் பின் தொடர்ந்தன. மேரி ஓட, நாரைகள் ஓட, அவர்கள் பந்தயத்துக்கு ஓடு வதுபோல் தோன்றினது. மேரி களைப்படைந்து கீழே விழுந்துவிடுவள் போலிருந்தது. இந்த ஸம யத்தில் இலந்தப் பழ மரத்தண்டை வந்து சேர்ந்து,

மரத்தை நோக்கி, மேரி: "மரமே, மரமே, என்னை எங்கேயாவது மறைத்து வைத்துக்கொள்; நாரைகள் தொடர்ந்து வருகின்றன; இன்னமொரு நிமிஷத்தில் குழந்தையைப் பிடுங்கிக்கொண்டு போய் விடும்" என்று கத்தினாள்.

இலந்தமரம்: மேரி, நீ செய்த உபகாரம் நான் மறக்கவில்லை. இதோ வந்துவிட்டேன்; உனக்கு ஒத்தாசை செய்கிறேன்.

இப்படிச் சொல்லி தன் இலைகளால் மரம் மேரியையும் குழந்தையையும் மூடிக்கொள்ள, நாரைகள் நேரே போயின. கொஞ்ச நேரத்துக்குப் பிறகு மேரி வெளியில் வந்து தன் வீட்டை நோக்கி ஓடினாள். இதை நாரைகள் திரும்பவும் கண்டு பின் தொடர்ந்தன.

சீக்கிரத்தில், மேரி அடுப்பண்டை வந்து இலந்தமரத்தை வேண்டிக்கொண்டதுபோல அதையும் வேண்டினாள். அதுவும் மிக நன்றியறிதலுள்ளதாய் மேரியை ஒளித்துவைத்துக்கொண்டது. நாரைகள் முன்போல நேரே போய்விட்டன.

மேரி அவசரப்பட்டு வெளியில் வந்து தம்பியைத் தூக்கிக்கொண்டு ஓடினாள். இதை நாரைகள் கண்டு "இனி இவளை விடுவதில்லை" யென்று தீர்மானித்து வெகு வேகமாய்ப் பறந்து பின்தொடர்ந்தன. மேரியினுடைய வீடு அருகில்தான் இருந்தது. அதற்குள் போவதற்குள்ளாக, நாரைகள் அவள் முகத்தைக் கொத்தி, தங்களுடைய சப்பட்டைகளால் அவள் தலையில் அடித்து, குழந்தையைப் பிடுங்கப் பார்த்தன. சிறு வயதாயிருந்தும், மேரி

தம்பியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு ஸாவதானமாய் வீட்டுக்குள் போய்ச் சேர்ந்தாள்.

குழந்தையை மெத்தையில் விட்டு, கதவுகளையும் ஜன்னல்களையும் மேரி சாத்திவிட்டாள். நாரைகள் வெகு கோபமாய் வீட்டைச் சுற்றிச் சுற்றிவந்து கூச்சலிட்டன; ஆனால் அவைகள் உள்ளே போக முடியாமல் அதிக விஸனத்தோடு திரும்பிப்போயின.

தாயும் தகப்பனும் சந்தையிலிருந்து திரும்பி வந்தபோது, மேரி நடந்த வர்த்தமானம் முழுவதும் சொல்ல, அவர்களுடைய தேகம் சந்தோஷத்தால் பூரித்தது. மேரியுடைய சாமர்த்தியத்தை மெச்சாதவரில்லை. மேரி பெரியவளானபோது, அடுப்பும் இலந்த மரமும் அவள் செய்த உபகாரத்தை ஞாபகம் வைத்துக்கொண்டு அவளுக்கு அநேக விஷயங்களில் ஒத்தாசை செய்தன.

## ருஷியா தேசத்து தேவதைகள் கதை

### முதல் பாகம்

ருஷியா தேசத்தின் வடபாகங்களில் அடர்ந்த விருக்ஷங்களுண்டு. குளிர் காலங்களில் ஓநாய்களும் கரடிகளும் இரைக்காக எங்கும் திரிந்துகொண்டிருக்கும். சில ஸமயங்களில், அவைகள் பசி மிகுந்து மனிதர்களையும் துரத்திப் பிடித்துத் தின்றுவிடும்.

இந்தக் காடுகளுக்கு ஸமீபத்தில் ஆலூகா என்று பெயருள்ள ஒரு சிறு பெண் குடியிருந்தாள். அவளுடைய பிதாவுக்கு அவள்மேல் பிரியம் அதி

கம்; ஆனால் தகப்பனுடைய இரண்டாம் பெண்சாதிக்கு அவளைக் கண்டால் பிடிக்கவே பிடிக்காது. இந்தக் கஷ்டம் போதாமல், அந்த இளைய தாயாருடைய பெண் மூர்கா ஆலிகாவை அடித்தும் ஹிம்ஸிப்பாள்.

ஆலிகாவுக்கு நல்ல குணமும், சாந்தமும், அழகும் எவ்வளவு அதிகமோ, அவ்வளவு மூர்காவுக்கு அவலக்ஷணமும், துஷ்டத்தனமும், துராங்காரமும் அதிகம். நாளாக நாளாக, ஆலிகாவின் சௌந்தர்யம் அதிகரித்தது. இதைக் கண்டு மூர்காவும் அவளுடைய தாயும் அதிக பொறாமைப்பட்டார்கள்.

கடைசியில், ஆலிகாவை வீட்டைவிட்டுத் துரத்தினால்தான் தாங்கள் கவலையற்றிருக்கலாமென்றெண்ணி, இளைய தாய் புருஷனண்டைபோய் 'ஆலிகா இனி இந்த வீட்டில் ஒரு க்ஷணமும் இருக்கக்கூடாது. உன்னுடைய மூதேவிப் பெண்ணை அழைத்துக்கொண்டு காட்டுக்குப் போய் அங்கே விட்டு விட்டு வா" என்றாள்.

தன்னால் ஆனமட்டும் புருஷன் அப்படிச் செய்யவேண்டாமென்று கெஞ்சினான். துஷ்ட ஸ்திரீ பிடிவாதமாய், அப்படிச் செய்தாலொழிய தன் முகத்தில் விழிக்கவேண்டாமென்றாள்.

அதன்மேல், வெகு துக்கத்துடன் பிதா ஆலிகாவை அழைத்துக்கொண்டு நெருங்கிய காட்டுக்குள் போய், அங்கே அவளை விட மனம் ஸகிக்காதவனாய், வெகுதூரம் பிரயாணம்போய் ஒரு சிறு குடிசையண்டை சேர்ந்தான். அந்தக் குடிசையில் விறகு




"I AM JACK FROST, MY DEAR,"
HE REPLIED.

‘‘பெண்ணே, நான் தள்ளாத தாத்தா’’

வெட்டுகிறவர்கள் குடியிருப்பது வழக்கம். அதற்குள் தகப்பனும் பெண்ணும் நுழைந்தார்கள்.

தகப்பன் : ஆலிகா, என் கண்ணே. இங்கே இரு ; வெளியில் போக எத்தனிக்காதே. விறகுகளை எரித்துக்கொண்டிரு. அப்போது உன்னைக் குளிர் வருத்தாது. ரொட்டியைக் கொஞ்சம் கொஞ்சமாய்ச் சாப்பிடு. நாளைக்கு இதே நாழிகையில் இங்கே வருகிறேன்.

இப்படிச் சொல்லிவிட்டுத் தகப்பன் திரும்பினான்.

ஆலிகா ஒண்டியாய் இருந்து தன் கதி இப்படி ஆனதே என்று வருத்தப்பட்டாள். சூர்யஸ்தமனமானவுடன், கொஞ்சம் ரொட்டி எடுத்து சாப்பிட ஆரம்பித்தாள். தக்ஷணமே, கதவை யாரோ தட்டின சப்தம் கேட்டது. ஆலிகா ஓடிவந்து கதவைத் திறக்க, அங்கே ஒரு கிழவன் நின்றான். அவனைப் பார்த்தால் ஆலிகாவுக்கு வெகு பயமா யிருந்தது. ஆனாலும் அவனை யாரென்று விசாரித்தாள்.

கிழவன் :—பெண்ணே, நான் தள்ளாத தாத்தா ; உள்ளே வரட்டுமா ?

ஆலிகா : வாருங்கள், தாத்தா. அனாதையான எனக்குத் துணையாக ஸ்வாமிதான் உங்களை இங்கே அனுப்பினர்.

கிழவன் உள்ளே வந்தவுடன், வீடு முழுவதும் குளிரெடுத்து ஆலிகா உடம்பு சிலுசிலுத்தது.

ஆலிகா : தாத்தா, கொஞ்சம் ரொட்டி வேணுமா ?

கிழவன் : பசியாயிருக்கிறது ; கொஞ்சம் கொடு.

இரண்டுபேரும் உட்கார்ந்து கொண்டு சாப்பிட்டார்கள். கிழவன் அனேக வேடிக்கைக் கதைகள் சொன்னான்; ஆனால், அவன் அங்கே இருந்தபோது குளிர் வெகு ஜாஸ்தியாயிருந்தது.

கிழவன்: ஆலிகா, நீ வெகு நல்ல பெண். நான் கதை சொல்ல ஆரம்பித்தால் பெண்கள் கொஞ்சம்கூடக் கேட்காமல் ஓடிப்போவார்கள். நீயோ அப்படியல்ல. நாளை தூங்கி எழுந்திருந்த உடன் வெளியில் வந்து பார்; உனக்கு நல்ல வெகுமதி ஒன்று வந்திருக்கும்.

இப்படிச் சொல்லிவிட்டு கிழவன் காட்டுக்குள் போய்விட்டான். ஆலிகா படுத்துத்தூங்கிப் போனாள். இராத்திரி முழுவதும் ஸ்வப்பனம் கண்டு கொண்டே இருந்தாள். தன் தகப்பன் வீட்டை விட்டுவந்த கஷ்டமெல்லாம் ஒரு ஸ்வப்பனத்தில் காணப்படும். கிழவனோடு பேசிக்கொண்டிருந்ததனால் உண்டான சந்தோஷத்தையும், தனக்குக் கிடைக்கப் போகிற வெகுமதியை நினைத்து ஆனந்திப்பதையும் இதெல்லாம் ஸ்வப்பனத்தில் கண்டு மகிழ்வாள்.

பொழுது விடிந்தவுடன், ஆலிகா படுக்கையிலிருந்தெழுந்து, கதவைத்திறந்து வெளியில் வந்தாள். அங்கே நீண்டவால்களும், அழகிய பிடரி மயிரும் கூடிய இருபது வெள்ளைக் குதிரைகள் நின்றன. ஒவ்வொன்றின் முதுகிலும் பொன் நாணயங்கள் நிறைந்த இரண்டுபைகள் இருந்தன. இதைக் கண்டவுடன் ஆலிகாவுக்கு சந்தோஷம் பொங்கினது.

இரண்டொரு நாழிகைக்குள், ஆலிகாவினுடைய தகப்பன் வந்து குதிரைகளையும் அவைகள் மேலிருக்கும் பணப் பைகளையும் பார்த்து ஆச்சர்யப் பட்டான்; ஆலிகா வெளியில் ஓடிவந்து தகப்பனைக் கட்டிக்கொண்டு நடந்த கதையெல்லாம் ஒன்றும் விடாமல் சொன்னாள்.

தகப்பனும் பெண்ணும் குதிரைகளை ஓட்டிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்கள். அவர்களைக் கண்டவுடன் இளைய தாயார் அதிகமாய்க் கோபித்தாள்; ஆனால், பணக்குவியலைக் காட்டினவுடன், "அப்படியானால், நாளைக்கு என்னுடைய பெண்ணை அந்தக் கிழவனிடத்தில் அழைத்துப்போ. ஆலிகாவைப் பார்க்கிலும் மூர்கா இரட்டத்தனை கெட்டிக்காரி; அதனால் அவளுக்கு இரட்டத்தனை வெகுமதியும் கிடைக்கும், அதற்குச் சந்தேகமில்லை" என்று புருஷனிடத்தில் சொன்னாள்.

---

## மூன்றும் பாகம்

அடுத்த நாள், கிழவன் மூர்காவை அழைத்துக் கொண்டு காட்டுக்குப்போய் முன்போலவே குடிசையில் விட்டுவிட்டு வந்தான்.

விளக்கு வைத்தவுடன், மூர்கா ரொட்டியை எடுத்து சாப்பிட ஆரம்பித்தபோது, கதவைத்தட்டின சப்தம் கேட்டது. கதவைத்திறந்தவுடன் பழைய தாத்தா உடம்பு முழுவதும் ஜலம் சொட்டிக் கொண்டு, "உள்ளே வரலாமா, அம்மா" என்று கேட்டான்.

மூர்கா (முகத்தைக் கடுகடுவென்று வைத்துக் கொண்டு): சரி, வாரும்; என்னுடைய முட்டாள் தமக்கைக்குத் கொடுத்த வெகுமதியைப் பார்க்கிலும் உயர்த்தியாய் எனக்கு வெகுமதி கொடுக்கவேணும். அதை ஞாபகம் வைத்துக் கொண்டு உள்ளே வாரும்.

கிழவன் உள்ளே வந்தவுடன், குளிர் ஜாஸ்தியாய், மூர்கா அடுப்பண்டை ஓடி, ரொட்டியை சாப்பிடத் துடங்கினாள்.

கிழவன்: பெண்ணே, எனக்குப் பசியாய் இருக்கிறது; கொஞ்சம் ரொட்டி கொடுப்பாயா?

மூர்கா: ரொட்டியா? எனக்கே போதாதென்று நினைக்கிறேனே; உமக்கு எங்கே யிருந்து கொடுக்கப் போகிறேன். தவிர, நீர் உள்ளே வந்து நுழைந்தது முதல் குளிர் நடுக்கிறதே. அதை நான் சகித்துக் கொண்டிருக்கிறது போதாதா?

கிழவனுக்குக் கோபம் அதிகமாய், அங்கே இருந்த சுள்ளிகளை எடுத்து மூர்கா மேல் எறிந்தான். அவளுக்கு ஒளிய இடம் இல்லை. கட்டைமேல் கட்டை அவள்மேல் வந்து விழுந்தது. உடம்பெல்லாம் காயமாய்ப் போய்விட்டது; துணியெல்லாம் இரத்தமாய் விட்டது; மூர்கா தேம்பித் தேம்பி அழுதாள். அழாதே என்று சொல்லவும் கிட்ட ஒருவரும் இல்லை; "தாத்தா, அவளை அடிக்காதேயும்" என்று சொல்லவும் ஒருவரும் இல்லை. இராத்திரி முழுவதும், மூர்கா தவித்துத் தவித்துக் கடைசியில் தரையில் படுத்துத் தூங்கிப்போனாள்.

மறுநாள் காலையில் மூர்காவுடைய தகப்பன், வெகுமதி அதிகமாயிருக்குமென்றெண்ணி, பெரிய வண்டி ஓட்டிக்கொண்டு குடிசையண்டை வந்தான். வெளியில் குதிரைகளுமில்லை, வெகுமதியு மில்லை. உள்ளே போனால், மூர்கா தரையில் பாதிபிராணன் போனவள் போல் படுத்துக் கொண்டிருந்தாள். ஆகவே, அவளைத் தூக்கி வண்டியில் போட்டுக் கொண்டு அவன் வீட்டுக்குத் திரும்பிப் போனான்.

மூர்காவுடைய தாயார் வாசலில் வந்து நின்று வெகு ஆவலாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள். ஒன்றும் இல்லையென்பதையும், மூர்கா உடம்பு முழுவதும் காயமாயிருப்பதையும் அவள் கண்டவுடன், மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்தாள். இரண்டொரு மணிநேரத்தில் அவள் இறந்தும் போய்விட்டாள். அவள் அதிக துஷ்டையானதால் ஒருவரும் அவளுடைய மரணத்துக்காக வருந்தப் படவில்லை.

ஆலுகாவை இனி ஹிம்ஸிப்பவர்கள் ஒருவரும் இல்லை. அவள் கண்ணுக்கு வெகு அழகு; குணத்தில் சிறந்தவள்; செல்வத்தில் மேலானவள்.

அந்த தேசத்து ராஜகுமாரன் அவளைக்கண்டு, அவளுடைய சௌந்தர்யத்தை மெச்சி, குணாதிசயங்களைச் சிலாகித்து, தன் அந்தஸ்துக்குச் சரியான ஆஸ்தியுள்ளவளென்றறிந்து சந்தோஷித்து, அவளை விவாகம் செய்து கொண்டான். ஆலுகாவினுடைய கஷ்டமெல்லாம் நீங்கி, பாக்யம் பொங்கினது. தன்னுடைய தகப்பனாரைக்கிட்ட வைத்துக் கொண்டு, தக்க மரியாதையுடன் வேண்டிய உபசாரங்கள் செய்து, அவரை ஸந்தோஷப்படுத்தினாள்.

ரூர்காவினுடைய துஷ்டத்தனத்தையும் மறந்து, அவளை அரண்மனைக்கு அழைத்தாள். ஆனால், அவளுடைய பொறுமை ஒரு க்ஷணம்கூட ஆலுகா பக்கத்தில் அவளை இருக்க விடவில்லை.

## ஸுலூதேசத்து தேவதைகள் கதை

### பயங்காளி காமா

ஆப்பிரிக்கா கண்டத்தின் தெற்கே ஸுலூ என்று பெயருள்ள காட்டுமுராண்டி ஜாதியார் ஒருவர் உண்டு. அவர்களுடைய தேகம் பெருத்தது; அவர்கள் வெகு தைர்யசாலிகள். வெகு காலத்துக்கு முன் அவர்கள் அங்கிலேயரோடு யுத்தம் செய்து அதிக வீர்யத்தைக் காட்டினவர்கள். எத்தனையோ இங்கிலீஷ்காரர்கள் அவர்கள் கையால் மடிந்தார்கள். ஆனால், கடைசியில் அங்கிலேயர் அவர்களை வென்று தங்களுக்கு உட்படுத்திவிட்டார்கள்.

அவர்களுடைய தேசத்தில் வட்டமான ஒரு சிறு குன்று இருக்கிறது. இதற்கு ஸமீபத்தில் ஸுலூ ஜாதியான் ஒருவனும் தைர்யமாய்ப் போக மாட்டான். அதில் அனேக தேவதைகள் குடியிருப்பதாய் ஸுலூக்களுடைய நம்பிக்கை; அந்தக் குன்றிற்கு "வாமன வம்சத்தார் ஆச்ரமம்" என்று பெயர்.

இந்தக் குன்றுக்கு ஒரே ஒரு ஸுலூதான் இதுவரையில் நெஞ்சு துணிந்து போயிருக்கிறான். இது நடந்தது வெகு காலத்துக்கு முன்னானாலும், அந்தக் கதையை இன்னமும் ஸுலூ தேசத்தார் சொல்லுகிறார்கள்.

காமா என்று பெயருள்ள சிறிய பையன் ஒருவனிருந்தான். அந்த கிராமத்திலுள்ள மற்றைப் பையன்களைப்போல அவ்வளவு பெரியவனுமல்ல, பலசாலியுமல்ல. ஊரிலுள்ள துஷ்டப் பிள்ளைகள் அவனை அடித்து, அவன்மேல் கல்லைவிட் டெறிவார்கள். அவன் திரும்பி அடிப்பதுமில்லை, அவர்கள் மேல் கோபிப்பதுமில்லை. அவன் தெருவில் போனபோதெல்லாம், மற்றப் பிள்ளைகள் அவனைப் பார்த்து நகைத்து, கைகொட்டிச் சிரிப்பார்கள்.

வாஸ்தவமாய் காமா பயங்காளி அல்ல. மற்றவர்கள் செய்யத் துணியாத அபூர்வ விஷயங்களைச் செய்ய அவனுக்கு ஆசையுண்டு; மனோ தைர்யமும் அதிகம். ஆனால், தேகபலமென்பதே அவனுக்குக் கிடையாது.

ஒருநாள் அந்த கிராமத்துத் தலைவன் காமாவுடைய தாயண்டைபோய்: "உன்னுடைய பிள்ளை காமாவுக்கு வயசு ஆய்க்கொண்டிருக்கிறது; அவன் வெகு ஒல்லியாயும் அசக்தனாயு மிருக்கிறான். அவன் இந்த கிராமத்திலிருப்பது நமக்குப் பெருமையேயில்லை. அவனை அழைத்துப்போய் காட்டில் விட்டுவிடப் போகிறேன்; அங்கேயுள்ள மிருகங்களுக்காவது அவன் உபயோகப்படட்டும்" என்று சொன்னான்.

காமா இதைக் கேட்டவுடன் திகிலடைந்து: "ஐயோ, தெய்வமே, நான் என்னசெய்வேன்? காட்டு மிருகங்கள் என்னைக் கடித்துத் தின்றுவிடுமே" என்று சொல்லித் தேம்பித்தேம்பி அழுதான். அவனை

கிராமத்திலிருந்து துரத்தும் நாள் கிட்டியது. எங்கே போய்த் தப்பித்துக் கொள்ளலாமென்று அவனுக்குத் தோன்றவில்லை. ஆனாலும் வடமலைக்குப் போய், தேவதைகளைத் தரிசித்து அவர்களுடைய ஒத்தாசை கேட்கலாமென்று கடைசியில் நினைவு வந்து, அங்கே போனான். நடக்க சக்தி யற்றவனாய், மெள்ள மெள்ள அவன் மலையில் ஏறினான். திடீரென்று அவனைச் சுற்றி நாலு பக்கத்திலும் தேவதைகள் சூழ்ந்துகொண்டார்கள். அவர்களெல்லாம் ஊருக்குத் தகுந்தாற்போல் பார்வைக்குக் கறுப்பாயும், கையில் ஈட்டியும் தோள்களில் சப்பட்டையும் கூடி வெகு விநோதமா யிருந்தார்கள். அவர்களில் ஒருவன் வெகு நன்றாய் உடுத்துக்கொண்டு, அவர்களுக்குத் தலைவன்போல் தோன்றினான்.

---

## இரண்டாம் பாகம்

தேவதைகளுடைய அர்சன் வெகு கோபமாய் காமாவண்டை வந்து "நெஞ்சு தைர்யமாய் இங்கே ஏன் வந்தாய்? இதோ உன்னைக் குத்திக் கொன்று விடுகிறேன். இது எங்களுடைய இராஜ்யமென்று உனக்குத் தெரியாதா?" என்று பேசினான். மற்ற தேவதைகளும் அவன்மேல் சிடுசிடென்று விழுந்தார்கள்.

காமா : தேவேந்திரா, கோபித்துக் கொள்ளாதே; ஏழைமேல் இரக்கம் வைக்கவேண்டாமா? என்னைக் கொல்வதில் பெருமை யேது? செத்த பாம்பை யடிப்பது பெருமையோ? நான் சக்தி

யற்றவன் என்று யாருக்குத் தெரியாது? அனு தைக்குத் தெய்வமே துணையல்லவா? என்னைக் காப்பாற்றும்.

தேவதைகளுடைய அரசன்: நீதானு காமா? உன்னைப்பற்றிக் கேழ்விப்பட்டிருக்கிறேன். நீ தைர்ய சாலி என்பது எனக்குத் தெரியும். அநியாய மாய் ஊரார் உன்னைத் தூஷிக்கிறார்கள்? அது எனக்கு வருத்தமாய் இருக்கிறது. உன்னைப் பலசாலி ஆக்கிவிடுகிறேன். இந்தச் சிங்கத்தின் தோல்மேல் படுத்துத் தூங்கு.

காமா அப்படியே படுத்துத் தூங்கினன். எவ்வளவு காலம் சயனித்துக்கொண்டிருந்தான் என்று சொல்ல முடியாது. விழித்து எழுந்திருந்தபோது அவன் வெகு பலசாலியா யிருந்தான்; மார்பு, தோள், கை, கால், எல்லாம் மிகப் பெருத்திருந்தன. தேவதைகள் மறைந்துபோய், அவன் பக்கத்தில் ஒரு பெரிய ஈட்டி இருந்தது. அதைத் தூக்கவும் உபயோகிக்கவும் அவனுக்குச் சக்தி உண்டாயிருந்தது. தன்னுடைய பலத்தை எல்லாருக்கும் காட்டுவதற்காக, காமா வெகு குதூகலத்துடன் தன்னூருக்குப் போனன்.

போகிற வழியில் ஒரு சிங்கம் அவனைத் தின்று பசி தீர்வதற்காக வெகு மூர்க்கமாய் அவன்மேல் பாய்ந்தது. காமா அதை யறிந்து தன் ஈட்டியை அதன்மேல் எறிய, அதற்கு உடனே பிராணன் போய்விட்டது.

காமா அதை எடுத்துத் தன் தோளின்மேல் போட்டுக்கொண்டு பழையபடி தன் வழியேபோனன்.

ஊர் போய்ச் சேர்ந்தவுடன் பெரியவர்கள் சின்னவர்கள் எல்லாரும் அவனைச் சுற்றிக்கொண்டு விசாரித்தார்கள். “இவனா காமா? நம்பவே முடியாது. சக்தியில்லாமல் பிணம் மாதிரி இருந்தவனுக்கு இவ்வளவு சக்தி எந்த விதம் கிடைத்தது?” என்று சொல்லி எல்லாரும் ஆச்சர்யப்பட்டார்கள்.

காமா: என் சக்தி உங்களுக்குத் தெரியவேணுமானால், இந்த ஈட்டியை எடுத்துப் பாருங்கள். அதைத் தூக்கி எறிய உங்களில் யாருக்காவது சக்தி யுண்டோ? நான் கொன்று தூக்கிக் கொண்டுவந்த இந்தச் சிங்கத்தை யாராவது அசையுங்கள் பார்க்கலாம். இனி என்னை பயங்காளி என்று சொல்வதற்கு உங்களுக்கு வாயில்லை.

உடனே அங்கே நின்றவர்களில் ஒவ்வொருவனும் ஈட்டியைத் தூக்கப் பார்த்தான்; ஒருவனாலும் முடியவில்லை. இதே முடியாதென்றால், சிங்கத்தை அசைக்க எவன் துணிவான்? ஒருவன் ஜம்பமும் பலிக்கவில்லை. அதன்மேல் காமா இடது கையால் ஈட்டியை எடுத்து வெகு அலக்ஷியமாய் அதை வெகுதூரம் எறிந்தான். சிங்கத்தை எடுத்து ஆகாயத்தில் விட்டெறிந்து பந்து பிடிப்பதுபோல் அதை இடது கையால் பிடித்தான்.

கிராமத்துத் தலைவனுக்கு இது வெகு சந்தோஷமாய் இருந்தது. காமாவின்மேல் அவனுக்கு வெகு ஆசை உண்டாய், நல்லகுடிசை ஒன்றும், நூறு பசுக்களும் அவனுக்கு இனமாய்க் கொடுத்தான்.



காமாவும் அவனுடைய தாயாரும் சௌக்ய மாய் அந்தக் குடிசையில் வெகுகாலம் இருந்தார்கள். காமாவுடைய கிராமத்துக்கு விரோதிகளே யில்லை; அந்த ஊராரை ஹிம்ஸிக்கத் துணிவாரும் இல்லை. காமா ஒருவனே ஆயிரம் பேருக்குப் பதில் சொல்வானே. அவனோடு யுத்தம் செய்ய ஒரு பெரிய சேனையும் எதிர் நிற்காது. அவன் தொடை தட்டிக்

கொண்டு வந்து நின்றால், எவ்வித தைர்யசாலியும் பலவானும் வாலைக் குழைத்துக்கொண்டு இருக்கிற இடம் தெரியாமல் ஓடிப்போவான்.

## சிவந்த இந்தியர் தேவதைக் கதை.

வெள்ளைக்காரர்கள் அமெரிக்காவுக்குப் போன தற்குமுன் அந்த தேசம் முழுவதும் சிவந்த இந்தியர்களைச் சேர்ந்தது. அந்த தேசத்தில் பிரமாண்ட மான ஏரிகளும், அவைகளைச் சுற்றி அடர்த்தியான ஆரண்யங்களும், பயங்கரமான காட்டு மிருகங் களும் உண்டு. அந்த தேசத்து மான் வெகு பெரி யதும், பலமுமானது; அதன் தலை வெகு அழகா யும், கொம்புகள் அதிக பெரியவையாயு மிருக்கும்.

இந்த சிவந்த இந்தியரில் ஒரு வம்சத்தார் ஒரு பெரிய ஏரியண்டை குடியிருந்தார்கள். மத்தியான வேளைகளில் அவர்கள் வெளியில் போய் மீன் பிடிப் பதும், வேட்டையாடுவதும் வழக்கம்; சாயங்காலத் தில் வீட்டுக்குத் திரும்பி, வாலீபர்கள் கல்யாணமா காத சிறு பெண்களோடு பேசிக் குலாவுவதும் வழக் கம்.

ஒரு பெண் பார்வைக்கு அவலக்ஷணமா யிருந்த தால் ஒருவரும் அவளுடன் பேசுகிறதில்லை. அவளு டைய முகம் மீனுடைய தலையத்தனை நீண்டதாயும், மோவாய்க்கட்டை பக்ஷியினுடைய மூக்கைப்போல் கூர்மையாயும், காதுகள் மானுடைய காதுக ளள வு பெரியவையாயு மிருந்தன.

அவளுடைய மனசு வெகுநல்லது; குரல் வெகு இனியது. அவளைப்போல் அவ்வளவு சிலாக்கிய மாய்ப் பாடுகிற பெண் அந்த தேசத்திலேயே இல்லை.

சூர்யஸ்தமன சமயத்தில், அவள் ஒவ்வொரு நாளும் ஏரிக்கரையில் உட்கார்ந்துகொண்டு பாடுவாள். அவள் பாடும்போது இலைகள் அசைகிற தில்லை, பக்ஷிகள் பாடுவதை நிறுத்திவிடும், மிருகங்கள் கிட்டவந்து கேட்டுக்கொண்டு நிற்கும்.

இந்தக் காக்ஷி வெகு விநோதமா யிருக்கும். கரடியும், ஓநாயும், நரியும், மானும், முயலும் சேர்ந்து நிற்பது ஆச்சர்யந்தானே! மரங்களின் கிளைகளில் எல்லாவித பக்ஷிகளும் உட்கார்ந்துகொண்டு சங்கீதம் கேட்கும். ஜலத்துக்குள் இருக்கும் மீன்களும் கரையண்டை வந்து தலையைத் தூக்கிக்கொண்டு பாட்டு கேட்கும்.

மான்களுடைய ராஜாவும், தன் பெருமையை மறந்து, பாட்டு கேட்க வந்துவிடும். அது கண்ணுக்கு வெகு அழகாய் இருப்பதுடன், பத்து மனிதர்கள் அவ்வளவு பலமுள்ளது. நாளுக்குநாள் அந்தப் பெண்ணின் கிட்ட அது வந்துகொண்டிருந்தது. கடைசியாய்ப் பெண்ணின் பக்கத்தில் வந்து பேசவும் ஆரம்பித்தது.

மான் அரசன்: உன் குரல் எவ்வளவு இனிமையாய் இருக்கிறது! நாள் முழுவதும் உன் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்தாலே போதும்.

இதைக் கேட்டு அந்தப் பெண் அதிகவும் மகிழ்ந்தாள். அவளுடன் பேசுகிறவர்கள் ஒருவருமில்

லாததால், மானுவது பேசுகிறதே யென்று அவ ளுக்குச் சந்தோஷம் உண்டாயிற்று.

ஒருநாள் அந்த மான் அரசு: பெண்ணே, என்னைக் கலியாணம் செய்துகொள்வாயா?

பெண்: அது எப்படி முடியும்? நீ எங்கள் குடிசை யில் வசிக்கவும் முடியாது, நானும் உன் காட் டில் இருப்பது சாத்தியமல்லவே.

இரண்டு பேரும் அதிகவும் விசனப்பட்டார்கள். ஒரு தேவதை இதைப்பார்த்து அவர்களிடத்தில் வந்து:

"இந்தப் பெண்ணிடத்தில் எல்லாரும் அதிக குரூரமாய் இருக்கிறார்கள். காட்டில் இருந்தால் இவளுக்கு சந்தோஷம் அதிகமா யிருக்கும்" என்று எண்ணி, பக்கத்திலிருந்த ஒரு மரத்திலிருந்து சில இலைகளைப் பறித்து அவள்மேல் போட, அவள் தத்க்ஷணமே வெகு சௌந்தர்யமான பெண்மானாய் மாறினாள். தேவதையினுடைய அனுக்ரகத்தால் இரு வரும் சுகமாய் வாழ்ந்திருந்தார்கள்.

---

## பர்சியா தேசத்து தேவதைகள் கதை

### முதல் பாகம்

பர்சியா வெகு உஷ்ணமான தேசம். மலைகளி லிருந்து நதிகள் ஓடி வருகிற சார்புகளிலும், பெரிய கிணறுகளின் பக்கத்திலும் ஜனங்கள் வஸிப்பார் கள். மற்ற இடமெல்லாம் மணல் நிறைந்த பாலை வனம்.

இவ்விதக் கிணறுகளி லொன்றின் பக்கத்தில் இரண்டு சகோதரர்கள் வசித்தார்கள். அவர்கள் பெயர் ஹத்திம், பெரிம். அவர்கள் வெகு நல்ல பிள்ளைகள்; ஒருவர்மே லொருவர் அதிக பக்ஷமா யிருப்பார்கள்; யாரைக் கண்டாலும் அவர்களிடத்தில் அதிக பிரியமாயிருப்பார்கள். அதனால், எல்லாரும் அவர்களிடத்தில் அதிக அன்பா யிருந்தார்கள்.

அவர்களுடைய தகப்பனுக்கு ஆஸ்தி நூறு மாடும் ஐம்பது குதிரையுமே. ஒவ்வொருநாளும் இந்தப் பிள்ளைகள் குதிரைமே லேறிக்கொண்டு போய் மாடுகளை மேய்த்து வருவார்கள்.

ஒரு நாள் காலையில்,

பெரிம்: அண்ணா, இன்றைக்கு நான் உன்னோடுகூட வரமுடியாது. வெயில் அதிகமாயிருக்கிறது; எனக்கு உடம்பும் சரியாயில்லை.

ஹத்திம்: குளிர்ந்த நிழலில் உட்கார்ந்து காற்றாடிக் கொண்டு நீ இன்றை முழுவதும் இருந்தால், உடம்பு சௌக்யமாய் விடும். இன்றைக்கு என்னுடன் வரவேண்டாம்.

இப்படிச் சொல்லிவிட்டு ஹத்திம் தனியாய்ப் போய் குதிரைகளையும் மாடுகளையும் மேய்த்துக் கொண்டிருந்தான். மத்தியானவேளை ஆயிற்று. ஒரு பையிலிருந்து கொஞ்சம் பேரீச்சம் பழம் எடுத்து சாப்பிட ஆரம்பிக்கையில், குதிரைமே லேறிக்கொண்டு ஒருவன் அவனை நோக்கி வருவது தெரிந்தது.

அன்னியன்: ஹத்திம், உடனே புறப்படு. உன்னுடைய தம்பி கிணற்றில் விழுந்து விட்டான்.

அவனை வெளியில் எடுக்க முடியவில்லை. உன்னுடைய தாயாரும் தகப்பனும் படுகிற துக்கத்தால் அவர்களுக்குப் பைத்தியம் பிடித்து விடும்போல் இருக்கிறது.

ஒரு நிமிஷமும் தாமஸிக்காமல் ஹாத்திம் குதிரையில் ஏறிக்கொண்டு வாயுவேகம் மனோவேகமாய் ஓடினன். பெற்றோர்கள் கையைப் பிசிந்து விம்மி விம்மி அழுது கொண்டிருந்த கிணற்றங் கரையண்டை வந்து, எவரும் தடுப்பதற்கு முன்னே, குதிரையிலிருந்தே கிணற்றுக்குள் குதித்தான். கிணற்றின் ஆழம் அதிகமானதால், தரைக்குப் போய்ச் சேருவதற்கு கொஞ்சம் நாழி ஆனது.

---

## இரண்டாம் பாகம்

ஹாத்திம்: இதென்ன ஆச்சர்யம்! நான் கிணற்றுக்குள் அல்லவா குதித்தேன். இதென்ன புல்வெளியா யிருக்கிறதே! திவ்வியமான நதி யொன்று மத்தியி லோடுகிறது. எதுவும் பார்க்கப் பார்க்க வெகு ரமணீயமாயிருக்கிறது. நான் ஸ்வப்பனம் கண்டு கொண்டிருக்கிறேனா? இது ஒன்றும் புரிய வில்லையே. நான் எங்கே இருக்கிறேன்?

இப்படிச் சொல்லிக்கொண்டு வெகு வேகமாய் ஹாத்திம் நடந்துபோனன். கொஞ்சதூரம் போனவுடன், அவனுக்காகவே ஒரு தோட்டத்தின் கதவு திறந்ததுபோல் தோன்றினது. எங்கே பார்த்தாலும் மனுஷ்ய வாசனையே இல்லை.



"WHERE IN THE WORLD AM I NOW?" HE SAID

ஹத்திம்: நான் எங்கே இருக்கிறேன்? (பக்கம் 59).

ஹத்திம்: இந்தத் தோட்டத்துக்குள் போவதற்கு எனக்குப் பாத்தியமில்லை. ஆனால் என் தம்பியைத் தேடிக் கண்டுபிடிக்கவேணும். அவன் ஒருவேளை உள்ளே போயிருப்பான்.

இப்படி சொல்லிக்கொண்டு, அவன் ஒரு ஒற்றடிப்பாதையின் வழியாய்ப் போனான்.

தோட்டம் வெகு அழகா யிருந்தது. எங்கே கண்டாலும் பரிமளம் வீசும் புஷ்பங்களும், பழங்கள் நிறைந்த விருக்ஷங்களும் இருந்தன. மரங்களில் நானாவித பக்ஷிகள் காதுக் கினிமையாய் பாடின. எதைப் பார்த்தாலும், அதன் அழகினாலும் வாசனையினாலும், புஷ்பத்தினாலும், பழத்தினாலும், ஆயசு முழுவதும் அங்கேயே இருக்கவேணு மென்பதாய்த் தோன்றும். அங்கே ஒரு பெரிய அரண்மனை காணப்பட்டது; தரையில் வெள்ளை சலவைக்கல் போட்டு வெகு குளுமையாய் இருந்தது. கதவும் திறந்து ஹத்திமை வா என்றழைப்பதுபோல் இருந்தது.

ஹத்திம் உள்ளே நுழைந்து பார்த்தான்; சுவர்களில் அழகான படங்களும் அபூர்வமான சாமான்களும் நிறைந்திருந்தன. எதைப் பார்த்தாலும் ஆச்சர்யமாயிருந்தது. விளக்குகள் நிறைந்து வெகு பிரகாசமாய் எரிந்து கொண்டிருந்த ஒரு பெரிய மண்டபம் தெரிந்தது. சுவர்களின் பக்கங்களில் வெகு விலையுயர்ந்த, கனமான பட்டு ஜமக்காளங்கள் விரித்து, அவைகள் மேல் தங்கத்தால் செய்யப்பட்ட ஆசனங்கள் போட்டிருந்தன. இந்த ஆசனங்களில் வெகு அழகான தேவதைகள் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் ஒரு பெரிய சிம்

மாசனத்தில் அந்த தேவதைகளின் ராணி உட்கார்ந்திருந்தாள். ஹத்திம் அவர்களைப்பார்த்து ஆச்சர்யப்பட்டான்; ராணியைப்பார்த்து மெய்மறந்தான். சிம்மாசனத்தின் பக்கத்தில் தன்னுடைய தம்பியும் உட்கார்ந்திருப்பதைக் கண்டவுடன் ஹத்தி மூக்குண்டான சந்தோஷத்துக்கு அளவில்லாமல் அவனண்டை ஓடினான்.

---

## மூன்றும் பாகம்.

இரண்டு சகோதரர்களும் ஒருவரை யொருவர் கண்டபோது கெட்டியாய்க் கட்டிக்கொண்டு ஆனந்தத்தில் அமிழ்ந்தார்கள்.

ராணி எழுந்திருந்து, வெகு பிரியமாய் ஹத்திமை நோக்கி: வாரும், வாரும், நீர் வருவது முன்னேயே எனக்குத் தெரியும். எல்லாம் உமக்காகத் தயாராயிருக்கிறது

என்று சொல்லித் தன் பக்கத்தில் ஒரு சிம்மாசனத்தில் அவனை உட்காரவைத்தாள். உடனே சிறு தேவதைகள் பழங்களும், பானகமும் கொண்டு வந்து ஹத்திம்முன் வைத்தார்கள்.

ஹத்திம்: நீ செய்வதெல்லாம் வெகு சந்தோஷமாயிருக்கிறது. அன்னியனை என்னிடத்தில் இவ்வளவு பிரீதியாய் இருக்கிறாயே! உன் அரண்மனையின் அழகென்ன, தோட்டத்தின் பரிமளமென்ன, உன்னுடைய சௌந்தர்ய மென்ன! பார்க்கப் பார்க்க எதுவும் ஆச்சர்யமாயிருக்கிறது.

ராணி : நான் தேவதைகளுக்கு எஜமானி. நீரும் உம்முடைய தம்பியும் இங்கேயே இருக்க வேணும். உங்களை விட்டுப் பிரிய எனக்கு ஸம்மத மில்லை. எப்போதும் நீங்கள் என்னுடன் இருங்கள். உங்களுக்கு எதுவேணுமென்றாலும், என்னுடைய வேலைக்காரர்கள் கொண்டு வந்து கொடுப்பார்கள்.



ஹாத்திம் : அப்படிச் சொல்லவேண்டாம். நீ வெகு நல்லவள்; உன்னழகைப் பார்த்துக்கொண்டிருந்தாலே போதும், மனுஷ்யனுக்குப் பசி தெரியாது, தூக்கம் வராது, எவ்வளவு காலமானாலும் அலுப்புண்டாகாது. இதெல்லாம் சரிதான். எங்களுக்குத் தாய் தகப்பன் இருக்

கிறார்களே. அவர்களைப் பார்க்கப் போகாதிருந்தால், அவர்கள் துக்கத்தினால் பிராணனை விடுவார்கள். ஆனதால், உன் மனசின்படி நடப்பது முடியாது.

இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் ராணி வெகு வருத்தப்பட்டு, கொஞ்சநேரம் பேசாதிருந்து, பின் :“உங்களைத் திருப்பி அனுப்பிவிடுவதுதான் சரி; என்னால் உங்கள் பெற்றோருக்கு ஒருவித சஞ்சலமும் உண்டாகக் கூடாது” என்று வெகு தயவாய்ச் சொன்னாள்.

ராணி (பின்னும்): உங்களை விட்டு எப்போதும் பிரிந்திருக்க என்னால் முடியாது. வருஷத்துக்கொருநாளாவது இங்கே வந்து என்னிடத்திலிருந்து போகவேணும்.

ஹத்திமும் அவன் தம்பியும் அப்படியே செய்வதாய் வாக்குக் கொடுத்தார்கள். ராணி ஒவ்வொருவனுக்கு ஒரு பை நிறைய விலையுயர்ந்த நகைகளும், இரத்தினங்களும் கொடுத்து கிணற்றின் அடிவரையில் கொண்டுவந்து விட்டாள். ஒரு க்ஷணத்தில் இருவரும் ஜலமட்டத்துக்குமேல் வந்து, வீட்டுக்குத் திரும்பினார்கள். பெற்றோர்களைப் பார்த்து, வெகுமதியைக் கொடுத்து, தங்கள் கதை முழுவதும் சொன்னார்கள்.

வருஷத்துக்கொரு தடவை அவர்கள் கிணற்றில் குதித்து, தேவதைகளின் ராணியோடு வெகு ஸந்தோஷமாய் ஒருநாள் முழுவதும் இருந்துவிட்டுத் திரும்புவார்கள். திரும்பும்போதெல்லாம் ராணி

அவர்களுக்கு விலைமதிக்க வொண்ணாத உயர்ந்த ஆப ரணங்கள் கொடுக்க, அவர்கள் வெகு பணக்காரர்க ளானார்கள்.

## இந்தியா தேவதைகள் கதை

### நல்லவனும், கெட்டவனும்

நம்முடைய இந்தியாவின் ஜனத்தொகை இங்கி லாந்தின் ஜனத்தொகையைப்பார்க்கிலும் ஆறு மடங் குள்ளது. நம்முடைய தேசமும் இங்கிலாந்தைவிட அனேக மடங்கு பெரியது.

வெகு காலத்துக்கு முன்னே, வட இந்தியாவில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். மூத்தவன் வெகு நல்லவன்; இளையவன் துஷ்டன். மூத்தவன் பெயர் சந்தானம்; இளையவன் பெயர் கரடகன். சந் தானம் எவரிடத்திலும் பிரியமா யிருப்பான்; கர டகனுக்குத் திருடுவதும், ஏமாத்துவதும், தூஷிப்ப தும், ஹிம்ஸிப்பதும்தான் எப்போதும் தொழில்.

பெற்றோர்கள் இறந்துபோகவே, ஒருவித சொத்துமில்லாமல், இரண்டு பிள்ளைகளும் அதிக சிரமப்பட்டார்கள். உடுத்துக்கொள்ளக்கூடத் துணி யில்லை. கிழிந்த சிறு துண்டுகளை இடுப்பில் கட்டிக் கொண்டு, கட்டுச்சாதம் கொஞ்சம் வாங்கிக்கொண்டு இருவரும் அயலூருக்குப் பிரயாணம் போனார்கள்.

ஒரு காட்டின் வழியாய்ப் போய்க்கொண்டிருக் கும் போது, சூர்யஸ்தமனமாயிற்று. அவர்களுக் குப் பசியும் ஜாஸ்தியா யிருந்தது.

கரடகன் : அண்ணு, உன்னிடத்திலிருக்கும் சாதத்தை முதலில் சாப்பிடலாம்; அது தீர்ந்து போனவுடன், என் மூட்டையை அவிழ்க்கிறேன்.

சந்தானம் இதற்கு ஸம்மதித்து, இரண்டு பேரும் அவன் சாதத்தைச் சாப்பிட்டார்கள். மற்ரு நாளும் அப்படியே நடந்து, மூன்ரும் நாள் சந்தானம் மூட்டையில் சாதமில்லை.

சந்தானம்: தம்பீ, இன்றை முதற்கொண்டு உன் மூட்டைச் சாதத்தைத்தான் நாம் சாப்பிட வேணும்.

கரடகன் : என் சாதத்தில் உனக்கு ஒன்றும் கொடுக்கமாட்டேன், நீ எதாவது செய்து கொள்.

சந்தானம் சண்டை போடாமல் பட்டினியாகவே நடந்துபோனுன். இரண்டு நாள் முழுவதும் சந்தானத்துக்குச் சாப்பிட ஒன்றும் கிடைக்கவில்லை. அதிக சோர்வடைந்து ஒரு வாய் சாதமாவது கொடுவென்று கரடகனைக் கேட்டான். கரடகன் அதற்கும் சம்மதியாமல் மூட்டையைத் தலையில் வைத்துக்கொண்டு தமையனைப் பசியால் வருந்தவிட்டு ஒடிப்போனுன்.

---

## இரண்டாம் பாகம்

இராத்திரிவேளை எங்கும் இருட்டாயிருந்தது. காட்டு மிருகங்களுடைய சப்தம் கேட்க ஆரம்பித்தது. பசியினுல் வருந்தி, நிற்கவும் நடக்கவும் சக்தியில்லாமல், மிருகங்களுக்குப் பயந்து, சந்தானம்

ஒரு மரத்தின் மேலேறி, இலைகளின் நடுவில் ஒளிந்து கொண்டிருந்தான். திடீரென்று, மரத்தின் அடியில் ஏதோ ஒரு சப்தம் கேட்டது. அது என்னவென்று பார்த்தபோது, ஒரு புலியும் நரியும் பேசிக்கொண்டிருந்தன.

புலி : எனக்குத்தெரிந்தது . பசியாயிருக்கும் மனிதர்களுக்குத் தெரிந்தால், அவர்களுக்கு எவ்வளவு அதிர்ஷ்டமாயிருக்கும்! இந்த மரத்தின் இலையில் இரண்டு பறித்துத் தின்றுவிட்டால் ஏழுநாளைக்குப் பசி என்பதே உண்டாகாது.

நரி : நிஜம்தான்; எனக்குத் தெரிந்த இரகஸ்யம் குருட்டு மனிதர்களுக்குத் தெரிந்தால், அவர்களுக்கு எவ்வளவு அதிர்ஷ்டம் உண்டாகும்! இந்த மரத்தின் பாலை எடுத்துக் குருட்டுக் கண்ணில் தடவினால் உடனே குருடனுக்குப் பார்வை உண்டாய்விடுமே.

சந்தானம் உடனே இரண்டு இலை பறித்துத் தின்று பசியாறினான். மிருகங்கள் போனவுடன், தன்னுடைய பை நிறைய அந்த மரத்தின் இலைகளை நிரப்பிக்கொண்டு, மரத்திலிருந்து கீழே இறங்கினான். கொஞ்சம் அந்த மரத்தின் பட்டையை பாலுடன் வெட்டி அதையும் பையில் வைத்துக் கொண்டான்.

இரண்டு மூன்று நாளில் ஒரு பட்டணத்துக்குப் போய்ச் சேர்ந்தான். கடைத்தெருவில் ஒரு சாவடி இருந்தது. அங்கேபோய் அவன் படுத்துக் கொண்டிருக்கும்போது,

ஒருவன் : நம்முடைய ராஜாவுடைய குமாரத்தியை ஒருவரும் இன்னும் ஸௌக்யப்படுத்தவில்லையே.

இன்னமொருவன் : இல்லை. ஒரு வருஷமாய் அவளுக்குக் கண் தெரியவில்லை. எத்தனையோ வைத்தியர்கள் வந்து பார்த்தார்கள்; சௌக்யப் படுத்த ஒருவனாலும் முடியவில்லை. ராஜாவுக்கு அதிக வருத்தமாயிருக்கிறது. எவன் அவளை ஸௌக்யப்படுத்துகிறானோ, அவனுக்கு அவளைக் கலியாணம் செய்து கொடுப்பதாய் இன்றைக்கு ராஜா உத்தரவின்படி தண்டோரா போட்டார்கள்.

சந்தானம் இதைக் கேட்டு ஸந்தோஷித்து, அரண்மனைக்கு ஓடி, தன்னால் ராஜகுமாரத்தியை ஸௌக்யப்படுத்த முடியுமென்றான். அவனைக்கண்டவுடன் வேலைக்காரர்கள் நகைத்து, "பிச்சைக்காரப் பயலே, உன் வழியைப் பார்த்துக்கொண்டு திரும்பிப் போடா. உனக்கு என்ன தெரியும்? நெஞ்சு தைர்யமாய் ராஜாயியை குணப்படுத்துகிறேனென்று வந்து விட்டாய்; பைத்தியக்காரா, ஒருவருக்கும் சொல்லாமல் ஓடிப்போ" என்றார்கள்.

சந்தானம் வெகு பிடிவாதமாய்த் தான் சொஸ்தப்படுத்த முடியுமென்று சொன்னதைக் கேட்டு, வேலைக்காரர்கள் அவனை அரண்மனைக்குள் அழைத்துக்கொண்டுபோய் ராஜாமுன் நிறுத்தினார்கள்.

## மூன்றும் பாகம்

அரசன் உத்தியான வனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் பக்கத்தில், சலவைக்கல்லால் படிகள்கட்டி, ஜலம் நிறைந்து, வெண்தாமரையும் செந்தாமரையும் கொஞ்சிக்கொண்டு பரவியிருந்த ஒரு தடாகம் இருந்தது. இவ்வளவு சம்பிரமத்துக்கு நடுவிலிருந்தும், ராஜாவுடைய முகத்தில் ஸந்தோஷம் என்பதே இல்லை.

ராஜா சந்தானத்தைப்பார்த்து: "நீ யார்? உனக்கு இங்கே என்ன காரியம்?" என்றார்.

சந்தானம்: பிரபூ, ராஜகுமாரத்திக்குக் கண் தெரியவில்லையென்று கேள்விப்பட்டு, அதை ஸரிப்படுத்துகிறதற்காக வந்திருக்கிறேன்.

ராஜா: ராஜகுமாரத்தியின் கண்ணை ஸௌக்யப்படுத்தினால், அவளை உனக்குக் கலியாணம் செய்து கொடுக்கிறேன்; தவிர, என் இராஜ்யத்திலும் பாதி உனக்குக் கொடுப்பேன். உன்னால் முடியாமற் போனால், உன் தலையை வெட்டிவிட உத்தரவு பண்ணுவேன்.

இதற்கு ஸம்மதித்து,

சந்தானம் ராஜகன்னிகை யிருந்த அரண்மனைக்குப்போய், அவளுடைய அழகைப்பார்த்து ஆச்சர்யப்பட்டு, அவளுடைய கண்ணை உடனே சௌக்யப்படுத்தி விடுவதாகச் சொன்னான். ராஜகுமாரத்தி இதைக்கேட்டு ஆனந்தப்பட்டு, தாமஸமில்லாமல் வைத்தியம் ஆரம்பிக்கும்படியாய்க் கேட்டாள்.

சந்தானம் பையிலிருந்து பட்டையை எடுத்து, அதிலிருந்த பாலை ராஜகுமாரத்தியின் கண்ணில் தடவி, இருட்டறையில் இரண்டு மணிநேரம் இருக்கும்படியாய்க் கேட்டுக் கொண்டான்.

மரத்தின் பால் கண்ணில் படவே, குளுகுளு என்றிருந்தது. கண்களும் கொஞ்சம் கொஞ்சமாய்த் திறக்க ஆரம்பித்தன. முழுவதும் கண்ணைத் திறந்தால் என்ன கெடுதலுண்டாகுமோ வென்று பயந்து அவள் கண்ணை மூடிக்கொண்டிருந்தாள். இரண்டு மணி நேரமானவுடன், ஒரு ஜன்னலைத் திறந்து, சற்று நேரத்துக்குப் பிறகு இன்னுமொரு ஜன்னலைத்திறந்து, இவ்விதம் கால்மணிக்குள் எல்லா ஜன்னல்களையும் திறக்க, ராஜகுமாரத்திக்கு இரண்டு கண்களும் பரிஷ்காரமாய்த் தெரிந்தன.

தாதிகள் உள்ளேவந்து பார்த்து ஸந்தோஷத்தால் குதித்து ஆரவாரம் செய்தார்கள். இந்த ஸமாசாரம் ராணி கேள்விப்பட்டு, அவள் ஓடிவந்து பெண்ணைப் பார்த்துக்களித்து அவளைக் கட்டிக்கொண்டு திரும்பவும் திரும்பவும் முத்தமிட்டாள். அரசனும் வந்து பார்த்து ஆனந்தப்பட்டான்.

உடனே பெண்ணுக்குத் திர்ஷ்டி கழித்து, விலையுயர்ந்த ஆபரணங்கள் பூட்டி, ஊர் கோலம் செய்து வைத்தார்கள். நானாவித ஜாதியாருக்கும் தானங்களும் தர்மங்களும் ஏராளமாய் நடந்தன. இவ்வித சந்தோஷத்தின் மத்தியில் சந்தானத்தை அரசன் மறந்துபோகவில்லை. உடனே அவனுடைய புதிய அந்தஸ்துக்குத் தகுந்த உடுப்புகள் தயார் செய்து,

அவனுக்குப் பணிவிடைகள் செய்வதற்காக வேலைக் காரர்கள் ஏற்படுத்தி, கம்பீரமான ஒரு பங்களா அவன் தங்கியிருப்பதற்காக ஒழித்துவிட்டு, எல்லா வித உபசாரங்களும் அவனுக்கு உண்டாகும்படி யாய் ராஜா ஆக்ஞாபித்தார்.

வெகு சீக்கிரத்தில் கலியாணம் நடந்து நாடு முழுவதும் ஸந்தோஷித்தது. எல்லாவித ஜனங்க ளுக்கும் அரசன் விருந்துபோடும்படி உத்தரவிட் டான்.

ஒருநாள் அஸ்தமிக்கும் ஸமயத்தில், சந்தான மும் அவன் மனைவியும் ஸவாரி செய்துகொண்டு போகும்போது, ரஸ்தாவில் ஒருவன் பிச்சை கேட் டுக்கொண்டு நின்றான். வஸ்திரம் பீறலாயும், உடம்பு இளைத்தும், தலைமயிர் வளர்ந்தும், அவன் இரக் கப்படத்தக்க ஸ்திதியிலிருந்தான்.

**சந்தானம்:** இங்கே வா, என்னை அடையாளம் தெரி கிறதா? நீ கரடகன் அல்லவா? நீ என்னைக் காட்டில் பட்டினியா யிருக்கவிட்டுப்போனவன் அல்லவா? ஆனாலும், நீ சகோதரன். உனக் கு வேண்டிய சாப்பாடும் வஸ்த்ரமும் கொடு க்க உத்தரவு செய்கிறேன். நீ நாளைக்குக் காலையில் என்னை எந்த மரத்தின் கீழ் விட்டு விட்டுப் போனாயோ, அதே மரத்தின் கீழ போய் இரு. உனக்கு சில ஸௌகர்யங்கள் அங்கே கிடைக்கும்.

அப்படியே கரடகன் மரத்தண்டை போய் அதன் கிளைகளில் உட்கார்ந்திருந்தான். முன்போ

லவே, புலியும் நரியும் வந்து கீழே நின்று பேசிக் கொண்டிருந்தன. கரடகன் உட்கார்ந்திருக்கக்கூட சக்தியில்லாமல், தவறி கீழே விழுந்தான். இரண்டு மிருகங்களும் அவனைப் பிடித்துக்கிழித்துத் தின்று விட்டன.

துஷ்டர்களுடைய கதி இதுதான்.

# சீன தேசத்து தேவதைகள் கதை

## இடிமுழக்கத்துக்குப் பயந்த பையன்

### முதல் பாகம்

சீனதேசத்தார் பார்வைக்கு வெகு விநோதமாயிருப்பார்கள். மஞ்சள் நிறமும், பாழ்ங் கண்ணும், தட்டை மூக்கும்—எல்லாம் பார்க்க வேடிக்கையாயிருக்கும். பெரிய ஆள்களும், உத்தியோகஸ்தரும் எல்லோரும் குடுமியைப் பின்னித் தொங்க விட்டுக் கொள்வார்கள்.

நாள் முழுவதும் கஷ்டப்பட்டு வேலை செய்தாலும், மொத்தத்தில் அவர்கள் வெகுதிர்ப்தியடைந்த ஜாதியார். ஏழைகளுக்குச் சாப்பாடு அகப்படுவது துர்லபம்; அப்படியிருந்தும் அவர்கள் துக்கப்படுகிறதுமில்லை, குடித்து வெறித்து சில ஜாதியாரைப் போல் நாசமாய்ப்போகிறது மில்லை. பின்வரும் கதை சீனதேசத்தில் எல்லாப் பிள்ளைகளுக்கும் தெரியும்.

வாங் என்றொரு பையனிருந்தான். அவனு டைய தகப்பன் வயலில் உழுது வேலை செய்பவன். கொஞ்சகாலமாய் ஊரில் மழை பெய்யாமல், கழனி யில் ஒருவித வேலையும் செய்யமுடியவில்லை.

வாங் வீட்டில் சாப்பிடுவதற்கு ஒன்று மில்லா மல் எல்லாரும் தவித்தார்கள். தான் சோம்பேரி யாய் இருந்துகொண்டு, பெற்றோர்கள் பட்டினியா யிருக்க விடுவது பிசகென்று அவன் நினைத்து, வேலை செய்து பணம் ஸம்பாதிப்பதற்காக அயலூருக்குப் போனான். அதே வழியில் ஒரு வயதுசென்ற கிழ வன் முதுகில் கனமான ஒரு மூட்டையைந் தூக்கிக் கொண்டு போனான். வாங் கிழவனண்டை போய்:

"தாத்தா, நான் வாலிபன், எனக்கு பலமிருக் கிறது; நீரோ அசக்தர். உம்முடைய மூட்டையை நான் கொஞ்சதூரம் கொண்டுவந்து கொடுக்கிறேன்" என்று சொன்னான்.

கிழவன்: நீ நல்லபையன். மகாராஜனாயிருப்பாய். ஏழைமேல் இரங்குகிறவர்கள் கொஞ்சம் பேர் தான். சிறு வயதிலேயே உனக்கு இவ்வளவு நல்ல மனஸு இருப்பது நல்ல அதிர்ஷ்டம்.

என்று சொல்லிப் பையன் தலையில் மூட்டையை வைத்தான்.

கிழவன் வேடிக்கையான கதைகள் சொல்ல, அவைகளைக் கேட்டுக்கொண்டு, பையன் மூட்டை யின் பாரத்தைப்பற்றி நினைக்காமலே போய்க்கொ ண்டிருந்தான்.

திடீரென்று வானம் கறுத்து, மேகங்கள் கூடி, இடி இடிக்க ஆரம்பித்தது. வாங், வெகு தைர்ய சாலியாயினும், இடியின் சப்தத்தைக் கேட்டால் அதிகமாய் பயப்படுவான். இடி முழக்கம் கேட்ட வுடன், மூட்டையைக் கீழே போட்டுவிட்டு, ஏஸ்தா வின் பக்கத்தில் படுத்து முகத்தை மூடிக்கொண்டு அழுதான்.

கிழவன் : இந்த இடிக்கா பயப்பட்டு அழுகிறாய்? உன்னைப் பயமுறுத்த இடியில் என்ன இருக் கிறது ?

வாங் : தாத்தா, இடி என்னமாய் உண்டாகிறது என் பது எனக்குத் தெரியவில்லை; தெரிந்தால் ஒரு வேளை பயப்பட மாட்டேன்.

கிழவன் : அப்படியானால், உனக்கு அந்த இரகஸ் யத்தைக் காட்டுகிறேன். நீ வெகு நல்ல பை யன்; நீ எனக்குச்செய்த உபகாரத்துக்கு பதில் உபகாரம் செய்கிறேன் வா.

---

## இரண்டாம் பாகம்

ஒரு க்ஷணத்தில், வாங் பறந்துகொண்டு வான த்தில் உயர உயரப் போய்க்கொண்டிருந்தான். அவனைச்சுற்றி எங்கேயும் மேகங்கள் பரவியிருந்தன. அவைகள் மேல் அவன் நின்றால், மெதுவான தலைய ணைகள் மாதிரி இருக்கும். கைகளால் மேகங்களைத் தள்ளிவிட்டுக் கீழே பார்க்க, ஸமுத்ரம் வெள்ளித் தகடுபோல் ப்ரகாசித்துத் தோன்றியது. பெரிய பட்டணங்களெல்லாம் சிறு எறும்புகள்போல் காண

ப்பட்டன. அவன் தலைக்குமேல் கொஞ்சதூரத்தில் நக்ஷத்ரங்கள் சீமைக்கமலம் போல் ஜ்வொலித்துக் கொண்டிருந்தன. பெரிய நக்ஷத்ரங்கள் அசைவில்லாமல் ஸ்திரமாயிருந்தன. வாங் சின்ன நக்ஷத்ரங்களில் ஒன்றை யெடுத்து இடுப்பு வேஷ்டியில் ஒளித்துக் கொண்டான்.

இப்படி யிருக்கையில், இரண்டு பெரிய பூதங்கள் ஒரு பெரிய வண்டியை இழுத்துக்கொண்டு போயின. அந்த வண்டியில் ஜலம் நிறைந்த ஒரு பெரிய தொட்டி இருந்தது. அந்த பூதங்களின் இடுப்புகளில் மணிகள் கட்டியிருந்தன. பூதங்கள் அசையும்போது, மணிகளும் சப்திக்கும்; அந்த சப்தத்தைத்தான் பூலோகத்தார் இடி யென்கிறார்கள்.

மூன்று ஆள்கள் வண்டியி லிருந்துகொண்டு, தொட்டியிலுள்ள ஜலத்தை எடுத்து மேகங்கள்மேல் தெளித்தார்கள். வாங்கைப் பார்த்தவுடன், அவர்கள் “ கிட்டவா, நீமாத்திரம் சும்மாயிருப்பானேன்; உனக்கொரு கரண்டி கொடுக்கிறோம்; அதனால் ஜலத்தை எடுத்து வெளியில் கொட்டு ” என்றார்கள்.

இதுதான் நல்ல ஸமயம் என்றெண்ணி, வாங் நிறைய ஜலம் எடுத்து தன் ஸொந்த கிராமத்தின்மேல் கொட்டி தன்னுடைய தகப்பன் நிலத்துக்கு பூர்த்தியாய்ப் பாய்ச்சி விட்டான்.

மூன்று ஆள்கள் : பையா, உன் ஒத்தாசையை நாங்கள் மறக்கமாட்டோம். இப்போது திரும்பி நீ பூலோகத்துக்குப் போய்விடு.

என்று சொல்லி மேகங்களில் ஒரு ஆணி அடித்து அதில் ஒரு நீண்ட கயிற்றைக் கட்டித் தொங்கவிட்டார்கள். வாங் அதைப் பிடித்துக் கொண்டு கீழே இறங்கினான். ஒரு க்ஷணத்தில் கயிறு மேலேபோய் மறைந்து விட்டது; வாங் தன் கிராமத்தின் தெருக் கோடியில் இருந்தான்.

ஊரிலுள்ள குளங்களும் நதியும் நிறைந்திருந் தன. வாங் தன் வீட்டுக்குள் நுழைந்தவுடன், பெற் றோர்கள் அவனைப் பார்த்து ஸந்தோஷித்தார்கள். ஆகாயத்திலிருந்து எடுத்து ஒளித்து வைத்துக் கொண்டிருந்த நக்ஷத்திரத்தை மேஜைமேல் வைக் கவே, வீடுமுழுவதும் பிரகாசமாயிற்று. அந்த தேசத்து ராஜா அதைப்பற்றிக் கேள்விப்பட்டு, பதி னாயிரம் பவுன் கொடுத்து அதை வாங்கிக்கொண் டான். அந்தப் பணத்தை வைத்துக்கொண்டு வாங் கும் அவனுடைய பந்துக்களும் ஸௌக்யமாய் கால க்ஷேபம் பண்ணிவந்தார்கள்.

# ஜெப்பான் தேசத்து தேவதைகள் கதை

## ஒரு சிட்டுக்குருவி கொடுத்த இனம்

ஜெப்பான்தேசம் சீன தேசத்துக்குக் கிழக்கே யிருக்கிறது. ஜப்பானியர் குட்டைதான்; ஆனால் அவர்கள் வெகு தைர்யசாலிகள், மிக சமர்த்தர்கள். தங்கள் தேசத்தின்மேல் அவர்களுக்குப் ப்ரீதி அதி கம். தேசத்துக்காக உழைப்பதில் அவர்களைப் போல் உற்சாக முள்ளவர்கள் எங்கேயு மில்லை.

ஜப்பானியர்கள் தங்கள் குழந்தைகளிடத்தில் அளவற்ற அன்புள்ளவர்கள். தாயார்கள் தங்களுடைய பிள்ளைகளுக்கு அனேக தேவதை கதைகள் சொல்வார்கள். பின்வரும் கதைசொல்லாத தாயும் இல்லை, கேட்காத குழந்தையும் இல்லை.

வெகு காலத்துக்கு முன், ஜெப்பான் நாட்டில் இரண்டு சிறுவரிருந்தார்கள். அவர்கள் பெயர் தோகோ, நோகோ. தோகோ நல்லவன், பக்ஷிகளிடத்திலும், மிருகங்களிடத்திலும் அதிக ப்ரியமாயிருப்பான். இதற்கு நேர் விரோதம் நோகோ. அவன் சோம்பேறி, துராங்காரி; யாரையாவது ஹிம்ஸித்துக்கொண்டிருப்பதில் ஆசையுள்ளவன். இளவயதாயிருந்தபோதே, அவர்களுடைய தாய் இறந்துபோய் விட்டதால், கெட்டசுபாவமுள்ள நோகோவின் போக்கைத் திருப்பி, சரிவரச் செய்வதிலொருவருக்கும் கவலையில்லை.

மூத்தவனான தோகோ வெகு செல்லமாய் ஒரு சிட்டுக்குருவியை வளர்த்து வந்தான். ஒரு நாள் காற்றாடி விடுவதற்காக அவன் வெளியே புறப்பட்டுப் போனபோது, அவன் தம்பி பொறாமையாய் அந்தப் பக்ஷியைக் கூண்டிலிருந் தெடுத்து, அதன் நாக்கை ஒருகத்தியால் அறுத்து விட்டு, அதை வெளியே பறக்கவிட்டான்.

கொஞ்சநேரம் கழிந்து, தோகோ வீட்டுக்குத் திரும்பி வந்தபோது, குருவியைக் காணமல், விம்மி விம்மி அழுதான். அங்கும் இங்கும் தேடிப்பார்த்து, எங்கேயும் காணமல், "குருவியே, குருவியே, எங்கே

போனாய்'' என்று அவன் கேட்டுக் கேட்டுத் துக்கித்தான்.

ஒரு நாள் தோகோ ஒரு பெரிய மலையடிவாரத் தண்டை போய்ச்சேர்ந்தான். அங்கே ஒரு மரத்தில் தன்னுடைய குருவி இருந்தது. தோகோவுக்கு எவ்வளவு ஸந்தோஷமோ, பரஸ்பரம் குருவிக்கும் அப்படியே யிருந்தது.

குருவி: பிரபூ, என் ஏழை வீட்டுக்கு வாருங்கள். உங்களுக்குப் பசியாய் இருக்கும். நடந்து நடந்து கால் வலிக்கும். என் வீட்டில் கொஞ்சகாலமிருந்து இளைப்பாறி, பிற்பாடு போகலாம்.

இதைக் கேட்டு, ஆனந்தித்து, தோகோ குருவியின் வீட்டுக்குப்போனான். அங்கே பெட்டைக் குருவியும் குஞ்சுகளும் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தன.

ஒரு வாரம், இரண்டு வாரம் தோகோ அங்கேயே இருந்தான். அவர்களை விட்டு வரக் கொஞ்சமும் மனமில்லை. இவனுக்கு வேண்டிய தெல்லாம் அவைகளும் கொண்டுவந்து கொடுத்தன. ஒவ்வொரு நாளும் விருந்துதான். கடைசியில், தான் வீட்டுக்குத் திரும்பிப்போக வேணுமென்று தோகோ சொன்னான்.

அப்போது, குருவி இரண்டு கூடைகள் கொண்டுவந்து, "வெறுங்கையாய் வீட்டுக்குத் திரும்பிப் போகக் கூடாது. இந்த இரண்டு கூடைகளில் எது உங்களுக்கு வேணும்?'' என்றது.

ஒரு கூடை இலேசாயும், இன்னமொன்று கனமாயும் இருந்தன. தோகோவுக்கு வெகுதூரம்

நடந்துபோகவேண்டியதா யிருந்ததால், இலேசான கூடையை எடுத்துக்கொண்டான். அவன் புறப்பட்டுப் போனபோது குருவிகளெல்லாம் அதிக வருத்தப்பட்டன.

தோகோ வீடுபோய்ச் சேர்ந்தபோது, அவனுடைய தகப்பன் வீட்டைவிட்டு வெகுகாலம் போயிருந்ததற்காகக் கண்டித்தான்.

பிதா: இவ்வளவு காலம் எங்கே போனுய்? இந்த சிறுவயதில் படித்து முன்னுக்கு வருவதைப் பார்க்காமல், காலாடியாய்த் திரிவது வெகு அழகுதான் !



தோகோ: கோபித்துக் கொள்ளாதேயுங்கள், அப்பா. என் குருவியைப்பார்க்க நான் போனேன். நோகோ அதன் நாவை அறுத்து வெளி

யில் துரத்திவிட்டானே. அதைத் தேடிக் கண்டு பிடிக்க நான் போனேன். அதைக் கண்டு கொஞ்ச நாள் அதனுடன் இருந்து திரும்பி னேன். புறப்படும்போது, இந்தக் கூடையை அவச்யம் எடுத்துக்கொண்டு போகவேணு மென்று குருவி கெஞ்சிற்று.

தகப்பனும் பிள்ளையும் கூடையைத்திறந்து பார்த்தார்கள். பொன்னும் வெள்ளியும் அதில் நிறைந்திருந்தது. தகப்பன் அதைக் கண்டவுடன், கோபத்தையெல்லாம் விட்டுவிட்டு, அதிக ஸந்தோஷமாய் தோகோவைத் தடவிக் கொடுத்தான்.

நோகோவுக்கு எவ்வளவு பொறுமையுண்டோ, அவ்வளவு பேராசையுமுண்டு. இந்தப் பணத்தையெல்லாம் கண்டவுடன், நோகோ "நானும் போய்க் குருவியைப் பார்க்கிறேன். எனக்கும் இதே மாதிரி இனும் கிடைக்கும்" என்று எண்ணி, தோகோ விடத்தில் போய், குருவியிருக்கும் இடத்தை விசாரித்துக்கொண்டு, புறப்பட்டுப் போனான்.

ப்ரயாணம் ச்ரமமாய்த்தான் இருந்தது.

முகத்தின் வேர்வை நிலத்தில் விழ, வெகு கஷ்டப்பட்டு, கால்கடுக்க நோகோ நடந்து போனான். கடைசியில், மலையும் கொய்யா மரமும் தெரிந்தது.

நோகோ : குருவியே, குருவியே, உன்னைப்பார்க்க வேணுமென்று வெகு ஆசையாயிருந்தேன். வெகுகாலமாய்ப் புறப்பட்டுவர சரிப்படவில்லை. உன்னைப்பார்க்க வெகு ஸந்தோஷமாய் இருக்கிறது.

குருவிக்குக் கொஞ்சமும் ஸந்தோஷமில்லை. ஆனாலும், எப்படிக் குரூரமாயிருக்கிறது? வெகு அஸம்மதமாய்த் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டுபோய், உபசாரமில்லாமல் சாதாரண சாப்பாடு அவனுக்குப் போட்டது. இந்தப் பாதகனுக்கு விருந்து போடவும் மனஸு வருமா? அவனை அதிகமாய் இருக்கவேணுமென்றும் கேட்கவில்லை. புறப்படும்போது, ஒரு இனாம் கொடுப்பதாயும் சொல்லவில்லை.

நோகோவுக்கு இதெல்லாம் வருத்தமாயிருந்தது. "குருவியே, நான் வீட்டுக்குப் போகிறேன். உன் ஞாபகமிருக்கும்படியாய் ஏதாவது இனாம் கொடு" என்று அவன் கேட்டான்.

குருவி ஒன்றும் பேசாமல், முன்போலவே இரண்டு கூடைகள் கொண்டுவந்து, அவன் முன் வைத்து "ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள்" என்று சொன்னது. கனத்த கூடையை எடுத்துக்கொண்டு நோகோ புறப்பட்டான். போகும்போது, வழியில் "கூடையில் என்ன இருக்கிறது என்று பார்க்கிறேன். இலேசாயிருந்த கூடையிலேயே அவ்வளவு வெள்ளியும் தங்கமுமிருந்ததே. இதில் வைரம் இருப்பதற்கு ஸந்தேகமில்லை" என்று தனக்குள் நோகோ சொல்லிக் கொண்டான்.

இந்த எண்ணத்தினாலேயே அவனுக்கு ஸந்தோஷம் மேலிட்டது. மூடியைத் திறந்து, நோகோ கூடைக்குள் பார்க்க, அதில் தேள்களும் பாம்புகளும், எலியும் பெருச்சாளியும், தேரையும் தவளையும்,

பூரானும் நண்டுகளும், குளவிகளும் நிறைந்திருந்தன. ஒன்று சீறி அவனைக் கடித்தது; இன்னுமொன்று கொட்டிற்று; இன்னுமொன்று பிடுங்கிற்று. ஆகவே, அவனுக்கு உடம்பெல்லாம் காயம்; தேகமெல்லாம் சகிக்கமுடியாத நோவு. கூடையைக் கீழே போட்டு விட்டு, பிழைத்தால் போதுமென்று அவன் அலறிக் கொண்டு வீடுபோய்ச் சேர்ந்தான்.

அழுகையும் துக்கமுமாய் "என் கதி இப்படி ஆச்சே" என்று அவன் புலம்பினான். மற்றவர்களிடத்தில் துஷ்டனாயிருந்ததற்கு இதுதான் பலனென்று அவன் அறிந்து, "இனி நான் ஒருவரையும் வருத்துவதில்லை; என் பாதகத்தொழிலுக் கெல்லாம் வேண்டிய வரையில் தண்டனை ஆய்விட்டது. போதும், போதும், புத்திவந்து விட்டது. ஈச்வரா, எனக்கு நல்ல புத்தியைக் கொடும்" என்று வருந்தினான். அது முதற்கொண்டு, நோகோ தமையனைப் போலவே வெகு நல்லவனானான்.

# ஆஸ்த்ரேலியா கண்டத்து தேவதைகள் கதை

## புஷ்ப தேவதை

இங்கிலீஷ்காரர் ஆஸ்த்ரேலியாவுக்குப் போய்க் குடியேறுவதற்குமுன், அங்கே அதிக கறுத்த நாகரீகமில்லாத ஒரு ஜாதி மனிதர் குடியேறி யிருந்தார்கள். அவர்கள் வெகு காட்டுமுராண்டி ஜனங்கள்.

அப்பேர்ப்பட்ட காட்டாள்கள் எவ்வளவு நேர்த்தியான தேவதை கதைகளைக் கட்டியிருக்கிறார்கள்! இது ஆச்சர்யம் தான்.

வெகு காலத்துக்குமுன் ஒரு தேவதை இருந்தாள். அவள் புஷ்பங்களுக்கெல்லாம் ராணி. புஷ்பங்களுக்கும் அவள்மேல் அதிக ஆசைதான். பக்கத்தில் அவள் போய்க்கொண்டிருக்கும்போது, மலர்கள் தலையைத் தூக்கிக்கொண்டு அவளைப்பார்த்துப் புன்சிரிப்பு சிரிக்கும். இப்படி அதிக காலம் இருந்துவிட்டு, தேவதை தேவலோகத்துக்குப் போய் விட்டாள்.

இப்படி தேவதை தங்களை விட்டுப் போனதறிந்து, பூக்களெல்லாம் தலைகுனிந்து துக்கிக்க வாரம்பித்தன. உயிரோடிருப்பதற்கே அவைகளுக்குப் பிரியமில்லை. ஒன்றின்பின் ஒன்றாக, எல்லாப் புஷ்பங்களும் வாடி வதங்கிப்போயின. கடைசியில், பெயருக்குக்கூட ஒரு புஷ்பமுமில்லாமல், புஷ்ப ஜாதியே நசித்துப் போய் விட்டது.

ஜனங்களுக்குத் தலையில் முடித்துக் கொள்ளவும், ஸ்வாமிக்குப் பூஜைபண்ணவும், மூக்கில் முகரவும், அறைகளை ஜோடிக்கவும், எந்த விஷயத்துக்கும் பூவென்பதே கிடைக்க வில்லை.

ஸூர்யன் ப்ரகாசமாய் எரித்தும், காற்று மிருதுவாய் வீசியும், ஜனங்களுக்குப் புஷ்பமில்லாததால் ஸந்தோஷமென்பதே இல்லாமல் போய்விட்டது.

இவ்விதக் கஷ்டம் உண்டாக, ஆறுபேர் புத்திசாலிகள் கூடி, "இந்தப் பூமியில் புஷ்பங்கள் இல்லா

மல்போனதால், ஸந்தோஷமும் ஒளித்துப் போய் விட்டது. ஸகலரும் துக்கஸாகரத்தில் அமிழ்ந்து போயிருக்கிறார்கள். நாமெல்லோரும் தேவேந்திர லோகத்துக்குப்போய் நமக்குக் கொஞ்சம் புஷ்பங்கள் கொடுக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுவோம்'' என்று யோஜனை செய்தார்கள்.

இந்த உத்தேசத்துடன், அவர்கள் புறப்பட்டு வெகு நாள் நடந்து போனார்கள். கடைசியில் ஒரு மிகப் பெரிய மலையண்டை சேர்ந்து, அதில் ஏறத் துடங்கினார்கள். அதிக சிரமப்பட்டு மலையின் உச்சியிற்போய், பர்வததேவதைகளைக் கண்டு வணங்கினார்கள்.

தேவதைகள்: இந்தப் பரிசுத்தமான ஆச்ரமத்தில் உங்களுக் கென்ன வேலை ?

ஆறுமனிதர்: எங்களுக்கு தேவேந்திர ஸபைக்குப் போகவேண்டும். அங்கே யிருந்து சில புஷ்பங்கள் வாங்கிக்கொண்டு வந்து பூமியை யெல்லாம் குளிரச் செய்ய வேண்டும்.

தேவதைகள்: உங்களுக்கு ஒத்தாசைசெய்ய எங்களுக்கும் சக்தியுண்டு; தவிர, மனஸுமுண்டு. நீங்கள் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்.

இப்படிச் சொல்லிக்கொண்டே, தேவதைகள் கொஞ்சம் மழையைக் கையிலெடுத்து ஸூர்யன் முகத்தில் தெளிக்க, ஒரு அழகிய வானவில் தோன்றியது. அதன் ஒரு நுனி மலையில் சாய்ந்து, வளைவு இந்த்ர ஸபையைநோக்கி அளாவியது. ஆறு மனிதரும் அந்த வில்லின் வழியாய்ச்சென்று காலாகாலத்தில் இந்த்ர ஸபைக்கும் போய்ச் சேர்ந்தார்கள்.

கேவலம் பூலோக மனிதரான இவர்கள் அங்கே எதைப் பார்த்தும் திகைத்தார்கள். ஆனாலும் திடசித்தராய்ப் புஷ்பங்களைக் காப்பாற்றும் தேவதையைத் தேடித் தேடி, கடைசியில் கண்டுபிடித்துத் தங்களுடைய துக்கத்தைச் சொல்லிக்கொள்ளவே, அத் தேவதையும் அதிக இளகின மனஸுள்ளவளாய், பாரிஜாத புஷ்பம் முதலிய நிகரற்ற அழிவில்லாத பரிமளம் மிகுந்த மலர்களை அவர்களுக்குக் கொடுத்தருளினாள். மனிதர்களும் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, அம்மலர்களை வாங்கிக்கொண்டு திரும்பவும் தங்களுடைய பூமிக்கு வந்து சேர்ந்தார்கள். அது முதல் இதுவரையில், நமக்குப் புஷ்பத்துக்குக் குறைவே யில்லை.

## ரிஜிஸ்தர் குறி "க்ளீடியன்ஸ்"

காசு பொருத மருந்தைச் சாப்பிட்டு என் தேகத்தைக் கெடுத்துக் கொள்ளுகிறீர்கள்?

சாஸ்த்ர ஸம்மதமான எங்களுடைய சிலாக்யமான ஒளஷதங்களை உண்டு களியுங்கள்!

1. **தேக புஷ்டி ஒளஷதம்:** தேகத்துக்கு மேனியை உண்டாக்கும் **க்ளீஸிரோ பாஸ்பேட்** என்னும் நிகரற்ற சரக்கை ஜீரணமாகும் விதமாய் இந்த மருந்தில் சேர்த்திருப்பதால், இது தேகத்தை பலப்படுத்தி, தாதுபுஷ்டி உண்டாக்கும். சிறிய புட்டி 1-க்கு ரூ. 1-8 பெரிய புட்டியின் விலை ரூபாய் 2.

2. **இரத்தசுத்தி ஒளஷதம்:** இரத்தம் எவ்வளவு கெட்டுப்போயிருந்தாலும், அதை சுத்திசெய்து, தேகத்தின் மற்ற பாகங்களை யெல்லாம் சீர்திருத்தும் உயர்ந்த மருந்து. இதற்கு ஜீரணசக்தி அதிகம். கிரந்தி முதலான புண்களால் உண்டாகும் ஸகிக்க முடியாத நோவுகளுக்கு இது கைகண்ட ஒளஷதம். விலை ஒரு ரூபாய்.

3. **ஜ்வர ஒளஷதம்:** எந்த விதமான ஜ்வரத்துக்கும் இது சிலாக்யமான மருந்து. க்வினைன் மருந்தைவிட மலுவானது. விலை 4 அணு; 10 அணு.

4. **பல்பொடி:** பிரதி தினமும் கிரமமாய் இதை உபயோகித்தால், வாய் துர்நாற்றம்போய் பரிமளம் வீசும். பல்தேய்ந்து சொத்தையாகாமல் தடுக்கும். பல்லுக்கும் அதன் பக்கத்திலுள்ள சதைக்கும் பலத்தைக்கொடுக்கும். விலை அணு 4; 6; 8; 14.

அயோனிக் பார்மஸி
கர்காம், பொம்பாய்.

சென்னை இராஜதானியின் எங்கள் ஏஜண்டு:

**எஸ். வைத்யா கம்பெனியார்,**

நைனியப்ப நாயக் தெருவு, பார்க் டவுன், சென்னபட்டனம்.

# குணமது கைவிடேல்.

## கஷ்டம் நீங்கிவிட்டது!

### காசாந்தக மாத்திரை

இது எங்கும் புகழ்பெற்ற ஓர் வரப்ரஸாதம். வியாதிகளுக்கெல்லாம்சேனுதிபதியான க்ஷயம், கபம், காசம், சீதோஷ்ண ஸ்திதியின் மாறுபாட்டாலும் குளிரினுலும் வருகிற இருமல் முதலியவைகளைக் குணப்படுத்திச் சுகப்படுத்துவதில் இதுவே கைகண்ட பரம ஔஷதம்; பாடகர்களுக்கும் வக்கீல்களுக்கும் உபயோகமா யுள்ளது.

ஒரு டப்பி 50 கொண்டது விலை ரூ. 1.

விலை ஜாபிதா இனும்.

வைத்திய சாஸ்திரி,

**மணிசங்கர் கோவிந்தஜி,**

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்: 22, பிராட்வே,

96, மவுண்ட்ரோட், மதராஸ்.

# ஆக்ஸ்பர்ட் தமிழ் நாவல்கள்

ஆங்கிலேயரால் இயற்றப்பட்ட வெகு அற்புதமான நாவல்கள் அனேகம் உண்டு. அவைகள் ஆங்கிலேய புருஷர்களும், ஸ்திரீகளும் படித்துப் படித்துத் திகட்டாமல் திரும்பவும் படிக்கும் புஸ்தகங்கள். அன்றியும், அனேக வருஷங்களுக்குமுன் அவைகள் எழுதப்பட்டவையாயினும், அவைகளுடைய அழகும், ருசியும், கொஞ்சமும் குறையாமல், இன்னமும் முன் போலவே யிருக்கின்றன. இவ்வித குணங்கள் நிறைந்த சில நாவல்களைத் தெரிந்தெடுத்துத் தமிழ் மாத்திரம் அறிந்தவர்களுக்கும் விஷயம் எளிதில் விளங்கும்படியாக அவைகளை அமைத்து எழுதியிருக்கிறோம்.

பிரெஞ்சு பாஷையில் முதலில் இயற்றி, அதிக பரிமளம் நிறைந்து, ஐரோப்பாவிலுள்ள பாஷைகளிலெல்லாம் தர்ஜுமா செய்திருக்கிற சிறந்த நாவல்கள் சில உண்டு. அவைகளில் வெகு சிலாக்கியமான இரண்டு கதைகளை எடுத்துத் தமிழில் எளிதான நடையில் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் தெரியும்படியாய்ப் பிரசுரம் செய்கிறோம்.

1. லிட்டன் பிரபுவால் எழுதப்பட்ட
"பாம்பிய நகரத்தின் அந்திய காலம்"

விலை : 8 அணா

2. நாவலெழுதுவதில் நிகரற்றவரும், பிரெஞ்சு தேசத்தவருமான ஜூலிஸ் வெர்ன் என்பவருடைய "சமுத்திரத்துக்குள் இருபதினாயிரம் யோசனை ஆழம்"

முதல் பாகம் : 9 அணா

3. விக்டர் ஹ்யூகோ என்ற பெயருள்ள பிரெஞ்சுக்கார நாவலெழுதும் ஸிம்மத்தை யாருக்குத் தெரியாது? அவருடைய நாவல்களில் ஜகம் முழுவதும் பிரஸித்தமான 'லா மிஸ்ரேப்லே.'

# ஆக்ஸ்பர்ட் தமிழ் வாசக புஸ்தகங்கள்

ஐரோப்பா கண்டத்தில் சிறுவர்களுக்குக் கற்பிக்கும் முறையைத் தீர ஆலோசனை செய்து கல்விமான்கள் அனேக வாசக புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். அவைகளை நன்கு கவனித்து, அவைகளில் கண்டிருக்கும் முறையை அனுசரித்து, இவ் வாசக புஸ்தகங்களை எழுதியிருக்கிறோம். இவைகளைப் பாடசாலைகளில் உபயோகித்தால், சிரமமேயில்லாமல் குழந்தைகளுக்கு வெகு சீக்கிரம் அபிவிர்த்தியுண்டாகும்.

பின் வரும் ஐந்து புஸ்தகங்களும் இப்போது தயாராயிருக்கின்றன.

| | | அ. | பை. |
|---|---|---|---|
| ஆக்ஸ்பர்ட் பால சிக்ஷை | | 1 | 6 |
| ,, | முதல் புஸ்தகம் | 2 | 0 |
| ,, | இரண்டாம் புஸ்தகம் | 2 | 6 |
| ,, | மூன்றும் புஸ்தகம் | 3 | 0 |
| ,, | நான்காம் புஸ்தகம் | 4 | 0 |

இந்தப் புஸ்தகம் ஒவ்வொன்றிலும் அனேக படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலட்டைக் காகிதம் சீக்கிரத்தில் கிழியாததும் விலை உயர்ந்ததுமானது.

பள்ளிக்கூடத்துத் தலைமை உபாத்தியாயர் இந்தப்புஸ்தகங்களை மாதிரிபார்க்கவேணுமென விரும்பினால், சென்னப்பட்டணம், ஹைகோர்ட்டுக்கு எதிரே சுங்குராம செட்டித் தெருவு, 21-நம்பர் கட்டடத்தில் ஆக்ஸ்பர்ட் சர்வகலாசாலைப் பிரெஸாருடைய மானேஜருக்கு எழுதவேண்டும். புஸ்தகம் நன்றாயிருந்தால், தம் பள்ளிக்கூடத்தில் அவைகளைப் பாடம் வைப்பதாயும், சாதாரணமாய் எத்தனை பிள்ளைகள் அவைகளை வாங்கக்கூடியதாயிருக்குமென்றும் எழுத வெகுவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.